1876-ம் வருஷம்
ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

78-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு ஆவணிமாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை — பிரிதசதம் 10 | 30-ம் இலக்கம்

## தேம்பாவணியும் செபமாலையும்

### களிகூர்ந்த காரணிக்கம்

செபமாலை சொல்லுகையில் காரணிக்கங்களைத் தியானித்துக்கொண்டு, பிரியதத்த மந்திரத்தைச் சொல்லுவது முறை. காரணிக்கத்தை நன்கு தியானிக்க, அவற்றைப்பற்றிய விளக்கம் தேவை. காரணிக்கத்திற் சொல்லப்பட்ட சம்பவத்தைச் சிறுசிறுபிரிவுகளாகப் பிரிப்பது, சிந்தனைசெய்வதற்கு உதவியளிப்பதாகும்.

வீரமாமுனிவர் செய்தருளிய தேம்பாவணியென்ற காப்பியத்தில், களிகூர்ந்த காரணிக்கத்தை மிகவும் பத்தியருட்சிக்குரிய விதமாய்த் தியானிப்பதற்கேற்ற சிலபகுதிகள் காணப்படுகின்றன. அவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். முதற்கண் களிகூர்ந்த காரணிக்கங்களில் முதற்காரணிக்கத்தை ஒவ்வொரு பிரியதத்தத்தின்போதும் சிந்திப்பதற்கு ஒவ்வொருவிஷயமாகப் பத்துச்சிறிய பிரிவுகளாகப்பிரித்து, அவற்றைச் செபமாலைத்தியானத்திற்கு உகந்தமுறையில் எடுத்துக்கூறுவேன்.

### முதற்காரணிக்கம் — முதற்பிரியதத்தம்

### 1. திருமணம்

சூசையப்பருக்கும் கன்னிமரியாளுக்கும் திருமணம் நடைபெறப்போகிறது. எருசலேம் நகரிலுள்ள தேவாலயமானது பூவுலகமோட்சமென்று சொல்லத்தக்கதாய் அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அத்தேவாலயத்தின் பிரதானகுருவாகிய சீமையோன் முனிவர், திருச்சடங்குகள் நிறைவேற்றுதற்கான உடுமானங்களைத் தரித்துக்கொண்டிருக்கிறார். தாவீதாசன் கோத்திரத்திலுள்ளாரும், பிறருமாகத் தேவாலயத்தில் பெருந்திரளாகக் கூடியிருக்கிறார்கள். அரசகுலத்திலுதித்த விவாகமாகாத வாலிபர்களது கைகளில் ஒவ்வோர்கோல்கள் காணப்படுகின்றன. அவர்களில் ஒருசிலர் தங்கள் கைகளிலிருந்த கோல்களில் வெறுப்புற்றார்போல, அவற்றை முரித்துக்கொண்டிருக்கின்றனர்.

அர்ச். சூசையப்பர் அழகிய வெள்ளைப்பூக்கள் பூத்த பூங்கொடியொன்றைக் கையில் வைத்திருக்கிறார். அதன் தெய்வமணம், தேவாலயமெங்கும் பரவுகிறது. அங்குகூடியிருந்த மக்கள் அனைவரும் சூசையப்பரைக் கண்ணிமையாது பார்த்துக்கொண்டிருக்கின்றனர். சிலர் 'பெரியதவத்தை உடையவனாகிய சூசையே இக்கன்னிகைக்கு ஏற்றகணவன்' எனப் புகழ்கின்றனர். சிலர் அவர்கையிலிருந்த பூங்கொடியைப்பார்த்து, 'இது சூசை செய்த தவத்துக்காகக் கடவுளால் கொடுக்கப்பட்ட வெற்றிவிருது' என்று போற்றுகின்றனர். சூசையப்பரோ "இக்கன்னிகையைப் பெறக்கூடிய பாக்கியமும் எனக்குளதோ? துறவியாக இருக்க வாக்குத்தத்தம் கொடுத்த எனக்கும் மணம்ஆகுமா?" என்று விவாகம் செய்வதற்குப் பயந்துகொண்டிருந்தபோது, ஆண்டவர் அவர்மனதில்தோன்றி, "இக்கன்னிகையை மணப்பது உன்விருப்பத்தின்படி துறவேயாகும்" எனக்கூறியதால் விவாகம் செய்வதைப்பற்றிய கவலைகள் நீங்கப் பெற்றவராய்ப் பேரானந்தம் அடைந்துகொண்டிருக்கிறார்.

கன்னிமரியாளும் மணஞ்செய்ய வேண்டியிருப்பதையிட்டுக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தபோது, அவள்மனதிலேயும் ஆண்டவர் தோன்றி, "உன் கன்னிமைக்குப் பழுதுவருமென்று அஞ்சாதே; நமதுஅருளால் உனக்கு நியமிக்கப்படுந் துணைவன் உனது கன்னிமையை நிலைபெறக் காப்பான்" என்று கூறியவாசகத்தால் உள்ளந் தேறி மனமகிழ்வோடு இருக்கின்றாள்.

இவ்வாறு பூங்கொடியுடன் நின்ற சூசையப்பரையும், பரிசுத்தகன்னிகையையும் சீமையோன் தமது அருகில் அழைத்து, அவர்களை ஆசீர்வதித்து, மார்போடணையத் தாங்கியபின் மணச் சடங்குகளை நிறைவேற்றுகிறார்.

**பண்டிதர், C. செல்வரேட்ணம்**

காந்தள் மிசையொரு தாமரையின் அலர்
காணல் எனஅரு மாதவன்
காந்தன் விரியுகை நானம் மலர்மிசை
காந்தை கரம்அணி வாகிவான்
வேந்தன் உம(து)உரி தாய முறைஉரு
மேவி வரஎனும் ஆசியோ(டு)
ஏந்த மறைமுறை எதில் முடிதர
எதில் அருமணம் ஆயதே.

[காணல்என—கண்டதுபோல; காந்தன்—மணவாளனாகியசூசை; விரியு—விரித்த; நானம்—வாசம்; காந்தை—மணவாளியாகியமரி; அணிவாகி—சேர்த்துவைத்து]

தாமரைமலர்போன்ற சூசையப்பர் கைமேல், காந்தள்மலர்போன்ற மரியின் கையைவைத்து, உங்கள்கோத்திரத்தின்வழியாகக் கடவுள்மனிதனாக அவதரிப்பாராக என்றுகூறித் திருமணச்சடங்குகளை இனிதாக நிறைவேற்றி வைக்கிறார். உடனே பலவகை வாத்தியங்களும் ஒலிக்கின்றன. அம்மங்கல ஒலிகளினிடையே "அறத்தின் உருவே வாழி! அருளின் நிலையே வாழி! உலகின்உயிரே வாழி!" என மணமக்கள் இருவரையும் அங்குள்ளார் வாழ்த்தியுரைத்த சோபன வாழ்த்தொலியும் கலந்துஒலிக்கின்றது. இத்துடன் திருமணவைபவங்கள் முற்றுப் பெறுகின்றன.

நிற்க, விவாகஞ் செய்வதில்லையென வார்த்தைப்பாடு கொடுத்திருந்த மகா பரிசுத்தரான இவ்விருவரையும் தேவன் மணமுடித்துச் சேர்த்துவைக்கத் திருவுளமான காரணத்தைச் சிந்திப்பாம். அந்நாளிலே மனிதர் நினைக்கத்தானும்முடியாத பாவங்களையெல்லாம் செய்துவந்தனர். ஒருவன்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)



## சுதேச வர்த்தமானம்

### யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

நாம்முன்னர் தெரிவித்திருந்த பிரகாரம் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு நிகழும் ஆவணிமாதம் 17-ந் திகதி ஆரம்பமாகும். யாழ்ப்பாணப் பகிரங்க வேலைப்பகுதிச் செக்மோசடி வழக்கு உட்பட இதிலே 27 வழக்குகள் விசாரணைசெய்யப்படவிருக்கின்றன. இவற்றிலே 20 வழக்குகள் கொலைவழக்குகளாகும்.

### அரிசி–மா–சீனி வரத்து

நிகழும்ஆவணியிலும், அடுத்த புரட்டாசி, ஐப்பசிமாதங்களிலும் பெருந்தொகையான அரிசி, மா, சீனியைத் தருவிப்பதற்கானஒழுங்குகளைக் கமத்தொழில்–உணவு மந்திரிகாரியாலயம் ஒழுங்குசெய்திருக்கிறது. இம்மூன்று மாதங்களிலும் 93,000தொன் பர்மிய, சீனஅரிசியும், 87,000 தொன்மாவும், 16,000 தொன்சீனியும் இலங்கை வந்துசேரவிருக்கின்றன. தற்போது இருப்பிலே உள்ளவற்றுடன் இவைகளும் சேருமிடத்து இவையெல்லாம் இவ்வருடம் முடிகிறவரையிலே இலங்கையின்தேவைக்குப் போதியனவாகும். இப்போதே முதன்முறையாக ஒல்லாந்திலிருந்தும் இலங்கைக்கு மாவரத் தொடங்கியிருக்கிறது. அங்கிருந்துதருவிக்க ஏற்பாடுசெய்திருந்த 20,000 தொன்மாவில் பன்னீராயிரம் தொன்னும் ஏலவேதானே வந்து சேர்ந்துவிட்டது.

### யாத்திரைப்பஸ் விபத்து

நாகதீபத்திற்குப் புத்தசமய யாத்திரிகர்களை ஏற்றிவந்த பஸ்ஒன்று சென்ற வெள்ளிக்கிழமை வவுனியாதெற்கிலே 106-வது மைல் கட்டைக்குச் சமீபமாய்க் குடைசரிந்து விபத்துக்குள்ளாகவே அதிற்காயமடைந்த பதினொன்கு பெண்களும், நான்கு ஆடவர்களும் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டனர். இவர்களிலே இருவரின்நிலைமை மிகமோசமாய் இருந்தமையால் யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

### அரிசிவிலை குறையுமா?

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையிலே ஊர்காவற்றுறைப் பிரதிநிதியான திரு. ஏ. எல். தம்பியையா அவர்கள் சென்றவாரம் நெடுந்தீவுக்கமப்பொருள் உற்பத்தி-விற்பனவுச்சங்க கூட்டத்தில் பேசியபோது: வாயைவயிற்றைக் கொஞ்சம் இறுகக்கட்டி அரிசிக்குப் பதில் மாவைப்பாவிக்கும்படி சனங்களைக் கேட்டுக்கொண்டார். உலகஅரிசிச் சந்தையிலே அரிசியின்விலை இறங்குமென அரசாங்கம் எதிர்பார்ப்பதாலே சமீபகாலத்தில் அரிசியின்விலை குறைக்கப்படுமென்ற நம்பிக்கையிருப்பதாகவும் அவர் தெரிவித்தனர்.

### பெரியாரின் நன்மதி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் உயர்தர வித்தியாகழகத்தின் வருடாந்த விருந்து சென்றவியாழக்கிழமை நடந்தேறியது. அதற்குப் பிரதமவிருந்தாடியாகச் சமுகமளித்திருந்த செவாலியர் சேர் சிற்றம்பலம் காடினர் அவர்கள் பேசியபோது: வாலிபர்கள் உடனேதானே பெரும் உத்தியோகபதவிகளை ஆசித்துநாடப்படாது; ஆனால், கிடைக்கும் எந்தப் பதவியையும் கையேற்று அதிலிருந்து மேலேஉயர வழிவகை தேடவேண்டுமெனப் புத்தியேவினின்றார். மேலும் உலகபாஷையாகிய ஆங்கிலபாஷையை அலட்சியஞ்செய்யப் படாதென்றும், பெரும்பான்மையினரின் பாஷையைக் கற்றுக்கொள்வதாலே கைத்தொழில்–வர்த்தகத்திலும், நல்லெண்ணத்திலும் சிறுபான்மையினர் நன்மையடையமுடியுமென்றும் ஆலோசனை கூறலாயினர்.

### ஆஸ்பத்திரிகளும் நோயாளரும்

கொழும்பிலுள்ள அரசினரின்பெரிய ஆஸ்பத்திரியில் 1,414 படுக்கைகள் இருந்துவருகின்றன. இவைகளை ஆயிரமாகக் குறைத்துவிடச் சுகாதார மந்திரி காரியாலயம் தீர்மானித்திருக்கின்றது. இதற்குக்காரணம் நோயாளர்கள் டக்றர்மார், நேர்ஸ்மாரின் சிறந்தபராமரிப்பைப் பெறச்செய்வதேயாகும். தற்போது கொழும்புப் பெரிய ஆஸ்பத்திரியிலுள்ள அநேக நோயாளர் பிறவிடங்களைச் சேர்ந்தவர்களே. இந்தநோயாளர் தத்தம் பகுதிகளிலுள்ள ஆஸ்பத்திரிகளை நாடச்செய்யுமாறு விசேஷப்பட்ட மாகாணஆஸ்பத்திரிகளுக்கு வைத்தியநிபுணர்களைப் பகிர்ந்து நியமனஞ்செய்யச் சுகாதார மந்திரிகாரியாலயம் தீர்மானித்துள்ளது. இதற்கோர் ஆரம்பநடவடிக்கையாகக் கண்டி, காலி, யாழ்ப்பாணப் பெரியஆஸ்பத்திரியிலே இந்தவைத்திய நிபுணர்கள் அமர்த்தப்படவிருக்கின்றார்கள்.

### சீனஅரிசியும் இலங்கையும்

வருடம்ஒன்றுக்கு மூன்றுலட்சம் தொன் அரிசி கொடுக்கும்படியாக நமது அரசாங்கம் சமீபத்திலே கம்யூனிஸ்த சீனாவைக் கேட்கலாயிற்று. ஆனால், அது 2லட்சத்து 70 ஆயிரம் தொன் அரிசியே கொடுக்க முடியுமென்று தெரிவித்திருக்கின்றது. இவ்வாறு கமத்தொழில்–உணவு மந்திரியாரின் காரியதரிசியான திரு. வி. குமாரசாமியவர்கள் பிரதிநிதிகள்சபையில் சென்ற திங்கட்கிழமை தெரிவித்திருக்கின்றார்.

# என்பெயர் சூசைப்பிள்ளை

ஒன்பதுவயதேயுள்ள ஓர் பாலியன் கல்லூரிஒன்றில் கல்விபயின்று வந்தான். அவன் திருக்குடும்பத்தின் தலைவரான அர்ச். சூசையப்பரின் திருநாமத்தைத் தனதுபெயராகக் கொண்டவன். அதனால் அப்பெயரையிட்டு அவன் மிகவும் அருமைபாராட்டுவான். தன் சிநேகிதர்களும், மற்றவர்களும் தன்னை "ஜோ" என்று அழைப்பது அவனுக்கு ஒருநாளும் பிடிக்காது. அவ்வாறு தன்னை எவனாவது அழைக்குங்கால் அவன்கோபங்கொண்டு "அர்ச். சூசையப்பரை அர்ச். ஜோ என்று தானா எல்லாரும் அழைக்கிறார்கள்? அப்படி அரைப்பெயர் குறைப்பெயராக என்னை எவரும்இனிமேல் அழைக்கப்படாது" என்று வாதாடுவான். தன்னைச் சூசைப்பிள்ளை என்றே அழைக்கும்படி சொல்லுவான்.

அவனுடையபாதுகாவலராகிய அர்ச். சூசையப்பரின் அழகிய சிறு படம் ஒன்று அவனிடம்இருந்தது. அப்படத்தில் ஒருசிறுபெண்பிள்ளை முழந்தாட்படியிட்டுத் தன் கையிலிருக்கும் ஒருபுஷ்பச்செண்டை அர்ச். சூசையப்பருக்குக் காணிக்கையாகக் கொடுக்கும்பாவனையாக அதில் சித்திரிக்கப்பட்டிருந்ததோடு, "சூசையப்பரிடம் போங்கள்" என்ற வாக்கியமும் அதில் பொறிக்கப்பட்டிருந்தது. இப்படம் சூசைப்பிள்ளைக்கு அவன் தாயாரால் கொடுக்கப்பட்டது. அதை அவனுக்குக்கொடுக்கையில் அவன் தாயார், "தம்பீ! இதோபார், இந்தப்படத்தில அந்தப்பெண்பிள்ளை அர்ச். சூசையப்பரிடத்திலே ஒருவரம்கேட்கிறாள்; நாமும் நம்முடைய அவசரங்களில் அர்ச். சூசையப்பரிடம் போகவேண்டும்; போய்க்கேட்டால், நாம்கேட்கிறதை அவர்நமக்கு அடைந்துகொடுக்காமல் போகவேமாட்டார்" என்று கூறலானாள். இது அவன்மனதில் பசுமாத்தாணிபோல் நன்கு பதிந்திருந்தது.

அங்ஙனமாக, அவன் தகப்பனார் தினந்தோறும் தினசரிப்பத்திரிகையை வாங்கி, அதிலே "தேவை" என்றபத்தியை மிகுந்தகவலையுடன் பார்த்துவருவதை அவன்கவனித்துவந்திருக்கிறான். அவன் தகப்பனாருக்கு முன்னிருந்த உத்தியோகம் போய்விடவே, சென்ற ஐந்தாறு மாதகாலமாய் மற்றோர்உத்தியோகத்தைத் தேடிக்கொண்டிருந்தார். அதனாற்றான் தினசரிப்பத்திரிகையில் "தேவை" என்றபத்தியை அவர் வெகுகரிசனையாய்ப் பார்ப்பது. அத்துடன் யாதோர்வேலைக்காகத் தினந்தோறும் வெளியேபோய் அங்குமிங்கும் அலைந்துதிரிந்து, இளைத்துக் களைத்து முகவாட்டத்துடன் அவர் வீட்டிற்குத்திரும்புவதையும் அவன் பார்த்துவந்திருக்கிறான். அவன் தாயார் ஒருநாள் அண்டைவீட்டு அம்மாளுடன் பேசிக்கொண்டிருக்கையில்: என்கணவருக்கு வேலைஒன்றுமில்லை; அதனால், அவர் பணமொன்றும் உழைத்துக்கொண்டு வருவதில்லை; எங்கள்பாடு வயிற்றுப்பிழைப்புக்கே பெருங்கஷ்டமாயிருக்கிறது என்று சொன்னது சூசைப்பிள்ளையின் காதில் விழுந்தது. ஆதலால், இதைப்பற்றி அப்பாலியன் வெகுவாகச் சிந்திக்கலானான்.

"ஏன் இந்தக்கஷ்டம்? இந்தச் சூசையப்பர்படத்திலே 'சூசையப்பரிடம் போங்கள்' என்று இருக்கிறது; அதில் ஒருபெண்பிள்ளையும் ஒருபூச்செண்டை அவருக்குக் காணிக்கையாகவைத்து, அவரிடம் ஏதோ வரம் கேட்கிறாள்என்று அம்மா சொன்னாளே; அப்படிநானும் என்செய்யலாகாது?" என்று தானேதனக்குள் கேட்டுக்கொண்டு ஒருமுடிவுக்குவந்தான்.

அதன்பயனாக, அவன்உடனே வீட்டின்பின்புறஞ்சென்று, அங்குபுஷ்பித்திருந்த வாடாமல்லிகைப்பூக்களைத் தன்சிறுகரங்களால் கொய்து, அவைகளை ஒருசிறுசெண்டாகக் கட்டிக்கொண்டு சென்றான்கோவிலுக்கு. அதன் இடதுபக்கத்திலிருந்த அர்ச். சூசையப்பரின் பீடத்தண்டை போனபோது, அங்குஏற்கெனவே ஒருபெரியவர் முழந்தாளிட்டுச் சூசையப்பரைப் பார்த்து மன்றாடிக்கொண்டிருப்பதைக் கவனித்து அவரண்டைபோய், மெதுவானகுரலில் "நீங்களும் ஒரு வேலைக்காகத்தான் வேண்டிக்கொள்ளுகிறீர்களா?" என்று கேட்டான். அதைக்கேட்டதும் அவர்திடுக்குற்று "வேலையா வேண்டும்?" என்று அவனைக்கேட்க,

"ஆம், சந்தேகமற நீங்கள்ஒருவேலையை, அல்லது வேறோர் நன்மையான காரியத்தைத்தான் கேட்கிறீர்கள்; இல்லாவிடில் நீங்கள் இங்குமுழந்தாளிவிருக்க மாட்டீர்கள்; இதோபாருங்கள் இந்தப்படத்தை; இதில் "அர்ச். சூசையப்பரிடம் போங்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது; எங்கள்தகப்பனாருக்கு வேலைஒன்று வேண்டியிருக்கிறது; அதற்காகத்தான் நான்சூசையப்பரிடம் ஓடிவந்தேன்.

"ஆனால், நீங்கள் அவருக்கு ஒரு காணிக்கை செலுத்தவேண்டும்; சும்மா வெறுமையாய், வெறுங்கையாய்க் கேட்கலாகாது; என்னிடமுள்ள இந்தச்செண்டில் பாதியை உங்களுக்குத்தருகிறேன்; இதை அவர்பாதத்தில் நீங்களும்வையுங்கள்" என்று சொல்லிக்கொண்டே தன்கையிலிருந்த செண்டைப்பிரித்து ஒருபாதியை அவரிடம்கொடுத்துவிட்டு மற்றப்பாதியை அர்ச். சூசையப்பரின் பாதத்தில்வைக்க முயன்றபோது, அது தன்கைக்கு எட்டாததால், எட்டிஎட்டிப்பார்த்தான். அதற்கிடையில் பூச்செண்டில் பாதியைப் பெற்றுக்கொண்ட துரைமகன் அவனதுசெண்டையும்வாங்கித் தம்முடையதையும்சேர்த்து ஒருமிக்கச் சூசையப்பரின்பாதத்தில் வைத்தார்.

முழந்தாளிட்டுச் சிறிதுநேரம் மன்றாடியபிறகு அப்பாலியன்எழுந்து அந்தத்துரைமகனிடம்சென்று, "ஐயா, அர்ச். சூசையப்பர் நீங்கள்கேட்டதைக் கொடுப்பாரென நினைக்கிறேன்; அவர் நான்பெயர்கொண்ட அர்ச்சியசிஷ்டர்; எனக்குப்பெயர் சூசைப்பிள்ளைதான்; நான்கேட்டதையும் அவர்எனக்குத் தப்பாமல்கொடுப்பார்" என்றான்.

அப்போது "என்பெயரும் சூசைப்பிள்ளைதான்" என்று அந்தத்துரைமகன் சிரித்தமுகத்துடன் சொன்னார். சொல்லவே பாலியன் ஆனந்தங்கொண்டு "அப்படியா? சரி! அப்போதுநாம் மூன்றுசூசைப்பிள்ளைகள் இங்கே இருக்கின்றோம்" என்று சூசையப்பரின் சுரூபத்தைக்காட்டி "அவர் ஒருசூசைப்பிள்ளை; நான்ஒருசூசைப்பிள்ளை; நீங்கள்ஒரு சூசைப்பிள்ளை; மூன்றுசூசைப்பிள்ளைகள்!" என்று சொல்லி உளம்பூரித்தான்.

இதைக்கேட்டதும் அந்தத் துரைமகன் சிறுவனைநோக்கி: "உன்னுடைய முழுப்பெயர் என்ன? உனது இருப்பிடம் எங்கே?" என்று கேட்டு அறிந்துகொண்டார். அப்புறம் பாலியன் பெரிதுஞ்சந்தோஷம் கொண்டவனாய்த் தன்வீட்டிற்குத் திரும்பினான். ஏனெனில், தனதுபடத்தில் கண்டிருந்தபடியே சூசையப்பரிடம் போனான்; தனக்கு வேண்டியதைக் கேட்டான்; கேட்டபடியே சூசையப்பர்கொடுப்பார் என்றநம்பிக்கை அவனைக் குதூகலப்படுத்தியது. அந்தநம்பிக்கைக்குப் பழுதில்லாது அவன்கேட்டது கொடுக்கப்பட்டது. அவன்தகப்பனார் அந்தத்துரைமகனின் பெரிய உத்தியோகசாலையில் இப்போது வேலைபார்த்துவருகிறார். அவன் தாயார் மனக்கவலைநீங்கிச் சுகமாயிருக்கிறாள்.

# சுதந்திர வெற்றி முழக்கம்

கோறியாவிலே சுதந்திர ஐக்கியநாடுகளின் வெற்றியானது, உலகிலுள்ள சுதந்திரமக்களின் வெற்றியாகும். கம்யூனிஸ்தஆக்கிரமிப்பு எந்தமக்களையேனும் இனிப்பயமுறுத்துமாகில், அந்த மக்களுக்கு இன்றைய கோறியாவில் ஐக்கியநாடுகளின் சாதனையானது தன்னம்பிக்கையும், நல்லுற்சாகமும் அளிக்கும் ஓர் படிப்பினையாகும். இனிமேல் எவரேனும் ஆக்கிரமிப்பில் இறங்கினால், அந்த ஆக்கிரமிப்புச்சக்திகளை முறியடிக்கச் சுதந்திரஉலகம் விறுகொண்டு ஒன்றாய் எழுமென்று இன்றையகோறியா படிப்பிக்கின்றது. அங்கு 22 நாடுகளைச்சேர்ந்த பராக்கிரமசாலிகள் ஒன்றுதிரண்டு ஐக்கிய நாடுகளின் கொடியின்கீழ் தோளோடுதோள் பொருத்திச் சுதந்திரத்தை நிலைநாட்டப் பணிபுரிந்தனர். இவர்களில் ஆயிரக்கணக்கான காளையர்கள் சுதந்திர இலட்சியத்துக்காகத் தங்கள்உயிரையும் தியாகஞ்செய்தார்கள். இந்தமகத்தான உயிர்த் தியாகமானது, பண்டுதொட்டு நிலவிவருகின்ற ஒருபெரும் நம்பிக்கையை—அதாவது சுதந்திரத்தையும், சமாதானத்தையும் நீடித்து நிலைபெறச் செய்வதற்காகவே சுதந்திர நாடுகள் தயாராய் எழும்பும்என்ற நம்பிக்கையைத்தருகின்றது.

இந்த இருபதாம் நூற்றாண்டிலே இதுவரை இரண்டு உலகமகாயுத்தங்கள் நடந்திருக்கின்றன. இவற்றிற்கிடையிலே, "லீக் அவ் நேஷன்ஸ்" என்ற சர்வதேசசங்கம் ஸ்தாபகமாயிற்று. 50 நாடுகளை அங்கமாகக்கொண்ட இந்தச்சங்கம் சதாவாக்குவாதத்தில் ஆழ்ந்திருந்தது. பேசியதெல்லாம் ஐக்கியபாதுகாப்பைப் பற்றித்தான். ஆனால், அந்தச் சங்கம் அதைப்பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆக்கிரமிப்பைத் தடுக்க அணைபோடாமல்போன விபரீதம்தான் அன்று ஆக்கிரமிப்பாளர் நிமிர்ந்துநின்றதன் காரணமாகும். அப்போதுசர்வதேசசங்கமானதுசுதந்திரத்தைக்காக்க ஐக்கியநடவடிக்கை எடுக்கத் தவறியதாலே 1931-ம் ஆண்டு மஞ்சூரியாமீது ஜப்பான் படையெடுத்தது. 1933-ம் ஆண்டு அபிசீனியாமீது இத்தாலி படையெடுத்தது. 1938-ம் ஆண்டு ஆஸ்திரியாவை ஜேர்மனிசுருட்டிக்கொண்டது. அதே ஆண்டில்தானே அது செக்கோசிலவாகியாவையும் பலிகொண்டது.

அன்று ஏன் இந்த அவல நிலையில் உலகம்தவித்தது? ஏனென்றால், சுதந்திரத்தை விரும்பியநாடுகள் சுதந்திர இலட்சியத்திற்காக நடவடிக்கை எடுக்கத் தயாராயிருக்கவில்லை. அன்றைய வரலாற்றைக் கவனித்தால் ஒருவிஷயம்புலனாகும். அதாவது, ஆக்கிரமிப்பை முறியடிக்கச் சதந்திர நாடுகள் எழுச்சிகொண்டு வேலைசெய்யவில்லை. அதனால் மண்ணாசை பிடித்தவர்களுக்கு வல்லமை கூடிவிட்டது. அன்று சுதந்திரத்தைவிரும்பிய நாடுகள் தைரியக்குறைவாலும், தன்னம்பிக்கைக் குறைவாலும், யாவற்றிற்கும்மேலாக ஒற்றுமைஇல்லாததாலும் ஆக்கிரமிப்புச்சக்திகளை முறியடிக்க ஆயத்தமின்றியிருந்தன.

மியூனிச் "உடன்படிக்கை" ஏற்பட்டபோது எல்லாரும் நினைத்தது என்ன? சர்வாதிகாரிகள் வைத்தது தான்சட்டம்; அவர்களைத் தட்டிக்கேட்கஆளில்லை; விட்டுக் கொடுப்பதைத்தவிர வேறுவழியில்லை; சுதந்திரத்தைக்காக்கத் தைரியமாக எதிர்ப்பதற்குப் பதில், விட்டுக்கொடுப்பது—அதாவது பணிந்துபோவதுதான் வழக்கத்துக்கு வந்ததுபோலும் என்பதே.

2-வது மகாயுத்தம் முடிந்தது. மீண்டும் எல்லோருக்கும் சமாதானநம்பிக்கை துளிர்க்கத்தொடங்கிற்று. புதியதோர் உலகஸ்தாபனத்தை — ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் — சமாதானத்தில் நம்பிக்கைகொண்ட மக்கள்தோற்றுவித்தனர். 1945-ம் ஆண்டு பிறந்தது இந்தஸ்தாபனம். இனிமேல் முன்போல மற்றோர் மஞ்சூரியாவோ, அபிசீனியாவோ, மியூனிச்சோ நடக்கவிடக் கூடாதுஎன்று கங்கணம் கட்டிக்கொண்டு உலகமக்கள் இந்தஸ்தாபனத்தை ஆரம்பித்து வைத்தார்கள்.

ஆனால், ஒருசோதனை உண்டானது. சோவியற் எதேச்சாதிகாரம் தனது உலகஆதிக்க மண்ணாசையை—ஆக்கிரமிப்புத் திட்டத்தைக்கொண்டு சமாதானத்தையும், சுதந்திரத்தையும் பயமுறுத்திற்று. நாஸிகளுக்குச் சுதந்திர நாடுகள் எப்படி விட்டுக்கொடுத்தனவோ அப்படியே தனக்கும் பணிந்துவிடும்என்ற இறுமாப்புடன் கம்யூனிஸ்தர்கள் ஆக்கிரமிப்பில் இறங்கினர். ஆனால், சுதந்திரஉலகம் விழித்துக்கொண்டது. ஆக்கிரமிப்பே கூடாதென்று சொன்னவர்கள் அந்தஆக்கிரமிப்பை முறியடிக்கச் செயலில் முனையவே,

1946-ம் ஆண்டு ஐக்கியநாடுகளின் நிர்ப்பந்தம் காரணமாக ஈரானிலிருந்து தனது படைகளைச் சோவியற் அரசு பின்வலித்துக்கொண்டது.

1947-ம் ஆண்டு கிறீஸ் நாட்டிலே சோவியற் தாசர்கள் கொடுத்துதவிய ஆயுதங்களையும், சாதனங்களையும் கொண்டு கம்யூனிஸ்த கலகக்காரர் ('கொறில்லா'க்கள்) குழப்பஞ்செய்தனர். அது, பிரித்தானிய—அமெரிக்க ஒத்துழைப்பைக்கொண்டு சுதந்திர கிறீசினால் அடக்கப்பட்டது.

1947-ம் ஆண்டு ஜேர்மனியிலே பேர்லின்நகரமக்களுக்கு அமெரிக்காவும், பிரித்தானியும் விமானங்கள்மூலம் உணவுப்பண்டங்களைக் கொடுத்துதவவே, பேர்லின்நகர முற்றுகையைச் சோவியற்ருஷியா கைவிட்டது.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வல்லமை, தைரியம், உறுதி ஆகியவற்றினால் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டது. சுதந்திர தேசங்களின் சாதனை இதுவாகும். பிறகு, 1950-ம்ஆண்டு ஆனிமாதம் 25-ந்திகதி கோறிய குடியரசின்மீது கம்யூனிஸ்தர்கள் வலுத்தாக்குதல் தொடுத்தனர். சோவியற்அரசு ஆயுதங்களையும், சாதனங்களையும்கொடுத்து ஏவிவிடவே, வடகோறிய கம்யூனிஸ்தர்கள் 38-வது சமாந்தர ரேகையைக்கடந்து, அமைதியாய்வாழ்ந்திருந்த தென் கோறியகுடியரசின்மீது திடீர்ஆக்கிரமிப்பில் இறங்கினர்.

இப்போது சுதந்திரஉலகம் இந்தக் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பைக் கண்டு என்னசெய்யப்போகிறது? என உலகம் பார்த்தது. அந்தக் கேள்விக்கு ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் பதில சொல்லிற்று. 1950-ம் ஆண்டு ஆனி 27-ந் திகதி—அதாவது கோறியாவில் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பு ஆரம்பமான இரண்டுநாள்கழித்து, ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச்சபை கலந்துபேசிக் கோறிய குடியரசுக்கு இராணுவ உதவி உடனேதானே அளிக்கவேண்டுமென்று அமெரிக்கவரசு சமர்ப்பித்த சிபாரிசை ஏற்றுக்கொண்டு அவ்வாறே சுதந்திரஉலகுக்குச் செயலாற்றுமாறு கட்டளையிட்டது.

ஆனிமாதம் 30-ந் திகதி அமெரிக்க படைகள் கோறியாப் போர்க்களத்தில் பிரவேசித்தன. ஆஸ்திரேலியா, நியூசீலாந்து, பிரித்தானி இம்மூன்றும் அமெரிக்க ஏழாவது கடற்படைக்குத் துணையாகக் கப்பல்களைச் சேர்த்தன. சிறிதுகாலத்திற்குள் 21 சுதந்திரநாடுகள் ஐக்கியநாடுகளின் ஸ்தாபனகட்டளையை மேற்கொண்டு தங்கள் வல்லமையைக் கோறியாவில் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பை முறியடிப்பதிலே ஈடுபடுத்தின.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# கத்தோலிக்க ✻ ✻ ✻ ✻ சமாச்சாரம்

## அரசியின் வத்திக்கான் தரிசனை

பசிபிக் சமுத்திரத்திலுள்ள ரொங்காதீவின் சாளொட்ரி அரசியும், மாற்றுஅஹோ இளவரசியும் லண்டன்நகரிலே முடிசூட்டு விழாவிற்குச் சமுகமளித்தபின் தங்கள் சுற்றுப்பிரயாணத்தின்போது வத்திக்கான் மாளிகையில் பரிசுத்த பாப்பரசரின் பிரத்தியேகபேட்டி பெற்றுக்கொண்டனர். அரசி பரிசுத்தஸ்தானத்தினிடமாகவுள்ள பிரித்தானியபிரதிநிதி காரியாலயத்தின் கருமாதிகாரியான திரு. ஆர். ஜி. எதறிங்ரன் – சிமித் அவர்கள்சமேதராய்ப் பேட்டிக்குச்சென்றனள். பாப்பரசரும் அரசியும் இருபதுநிமிஷங்கள் வரையில் சம்பாஷணைநிகழ்த்தினர். பின்னர் அரசிவத்திக்கான் இராச்சிய மந்திரிமார்களைச் சந்தித்து அவர்களுடன்சம்பாஷித்தனள். அவ்வேளை ஆங்கில பாஷையிலே அரசிக்குள்ள வாக்குவன்மையை அவர்களில் ஒருவரான மொன்சிஞ்ஞோர் டேலாக்குவா அவர்கள் பெரிதும் புகழ்ந்து பாராட்டினர். அப்போது அரசி: "எனதுநரம்புகளிலே கொஞ்சம் ஆங்கிலஇரத்தத்தைக் கொண்டிருக்கிறேனென்று தங்களுக்குத் தெரியுந்தானே; எனதுமுன்னோர்களில் ஒருவர் நியாயமானஒருதொகை மிஷனரிமார்களைச் சாப்பிட்டிருக்கிறாரென நான் சொல்லக் கேட்டிருக்கிறேன்" என்று புன்னகையுடன் கூறினாள்.

## காட்சிபெற்ற பிள்ளைகள்

பெல்ஜியத்தில் பன்னே, போறேய் எனுங்கிராமங்களில் இற்றைக்கு 20 வருடங்களின்முன் தேவதாயார் காட்சியளித்தார். பன்னேஎனும் கிராமத்திலே 1933-ம் ஆண்டு தை 15-ந் திகதிக்கும், பங்குனி 2-ந் திகதிக்குமிடையில் வேதானுசாரமற்ற ஓர்குடும்பத்தில் பிறந்த எட்டுப்பிள்ளைகளில் மூத்தபிள்ளையாகிய 12 வயசுடைய மறியெற்றே பெக்கோஎனும் சிறுமிக்கு எட்டுமுறை காட்சியளித்தார். போறேய்எனும் கிராமத்தில் 1932-ம் ஆண்டு கார்த்திகை 29-ந்திகதிக்கும், 1933-ம் ஆண்டு தை 3-ந் திகதிக்குமிடையிலே ஐந்துபிள்ளைகள் 35 முறை மாதாவின் காட்சிபெற்றார்கள். இந்தஐந்து பிள்ளைகளிலும் அன்ட்ரீ டெகெய்ம்பிறேஎன்ற ஒருபிள்ளை மாத்திரம் தற்போது அக்கிராமத்தில் சஞ்சரித்திருக்கின்றாள். மூன்றுபிள்ளைகள் பெல்ஜியத்தின் வேறுவேறு பகுதிகளில் வசிக்கிறார்கள். ஓர்பிள்ளை ஆசிரியையாக ஆபிரிக்காவிலுள்ள பெல்ஜியகொங்கோ நாட்டிற்குச் சென்றிருக்கின்றாள். தங்களுக்கு அளித்த காட்சிகளின்போது தேவதாயார் கூர்ந்தநீலக் கண்களுடன் காணப்பட்டாரெனத் தற்போது மூன்றுபிள்ளைகளுக்குத் தாயாய்இருந்துவரும் அன்ட்ரீகூறுகின்றாள். ஈறுந்த காட்சிபெற்ற நாள்முதல் ஒவ்வோர்சாயந்தரமும் தற்போது வளர்ந்துள்ள அப்பிள்ளைகளில் ஒருபெண் அல்லது அதற்குமேற்பட்டோர் காட்சிபெற்ற அத்திருசேத்திரத்தில் முழந்தாட்படியிட்டுத் தவறாதுசெபமாலைசெபித்து வருகின்றனர். வழமையான இந்தச்செபமாலையைத் தினமும் செபித்துவரும் பொறுப்புத் தனக்கேஉரியதென அன்ட்ரீ உணர்ந்து இடையிலே தவறாது அவ்வாறு செய்துவருகின்றாள். காட்சிபெற்ற ஏனையவர்கள் அதனைத்தரிசிக்கும்போது அவளுடன் சேர்ந்துகொள்ளுகின்றார்கள். போறேய்பதியின் பெரிய யாத்திரைத்தினம் மரியாயின் மாசற்ற இருதயத் திருநாளாகிய ஆவணிமாதம் 22-ந் திகதியாகும். அதனைத் "தங்கஇருதய" நாள்என்று சகலரும் அழைக்கின்றனர். ஏனெனில், சோதிப்பிரகாசகதிர்களாற்சூழப்பெற்ற ஓர் தங்கஇருதயத்துடன் தேவதாயார் அன்று காட்சியளித்தார்.

## சமாதான முத்தம்

ஊர்துபதிக்கு முன்னாள்யுத்தவீரர்கள் சமீபத்தில் நடத்திய சர்வதேசயாத்திரையின்போது யுத்தத்திற் காயமடைந்து முடவரான ஜேர்மன்குருப்பிரசாதி ஒருவரும், ஓர் பிரான்சியரும் திருக்கெபிக்கு நடந்தேறிய சுற்றுப்பிரகாரம்ஒன்றின்பின் ஒருவர்க்கொருவர் வழங்கிய சமாதானமுத்தம் பெரிதும் மனவருட்சிக்குரிய ஓர்காட்சியாயிற்று. முன்னாள் போர்வீரர்களான ஜேர்மனியர்கள் 1,000 பேர் உட்படப் 12 நாடுகளைச்சேர்ந்த சுமார் 12,000 பேர் அவ்வேளை தங்களிடம்கேட்கப்பட்ட மூன்று கேள்விகளுக்கும் "ஆம், வாக்குப்பண்ணுகிறோம்" என்று ஆர்ப்பரித்து விடைகூறினார்கள். மூன்றுகேள்விகளும்வருமாறு:- "யுத்தத்திலே உங்கள்எதிரிகளாயிருந்த எல்லோரையும்மன்னிப்பதாக வாக்குப் பண்ணுகிறீர்களா? யுத்தகைதிகளாக இன்னுமேநிறுத்திவைக்கப் பட்டிருக்கிறவர்களுக்கு உங்களுக்குள்ள செல்வாக்கையும், அதிகாரத்தையுங்கொண்டு செய்யக்கூடியதெல்லாம் செய்வதாக வாக்குப் பண்ணுகிறீர்களா? பெண்களும், பிள்ளைகளும் பலியாகின்ற ஓர் யுத்தத்துக்காக இனிமேல் ஒருபோதுமே உழைப்பதில்லையென்று வாக்குப்பண்ணுகிறீர்களா?" — அவ்வேளை ஓர் பிரான்சியஜெனறல் ஒவ்வோர் ஜேர்மன் யாத்திரிகருடனும் கைகுலுக்கிக்கொண்டார்.

## மனந்திரும்பிய மைத்துனியார்

பிரித்தானியஅரசின் பிரதமமந்திரியாரான சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில்அவர்களின் மைத்துனியாரான 67 வயசுடைய ஸ்ரீமதி கிளேயர் ஷெறிடன் எனும்மாது சுரூபங்கள் வெட்டுவதில் மிகவும் திறமைவாய்ந்து விளங்குகின்றார். சமீபத்தில் நடைபெற்ற ஓர்பொருட்காட்சியிலே இவரால் வெட்டப்பெற்ற சுமார் இருபதுசுரூபங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலானவை மரத்திலேயே வெட்டப்பட்டவைகள். இவற்றிலே ஏறக்குறைய அரைவாசியும் தேவமாதாவின் சுரூபங்கள். இச்சுரூபங்களில் சமாதானத்தின் இராக்கினியுடைய சுரூபந்தான் சேர் வின்ஸ்ரன் சேர்ச்சிலுக்கு நன்றாகப்பிடித்துக்கொண்டதாக மைத்துனியார் கூறுகின்றார். இதனைவெட்டுவதற்குப் 18மாதங்கள் இவருக்குப்பிடித்தன. ஸ்ரீமதிஷெறிடன் அசீசிநகரிலே இற்றைக்கு ஆறுவருடங்களின்முன் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொள்ளலாயினர். இதையிட்டு சேர் சேர்ச்சில் அதிகம்சந்தோஷம் அடைகின்றார். ஆனால், அவர் எப்போதாவது திருச்சபையில் சேர்ந்துகொள்வார்போல் இல்லையென்று இவர் கூறுகின்றார்.

— ஆஸ்திரிய நாட்டைச் சோவியற் ருஷியா அடிப்படுத்திக்கொண்ட நாள் முதல் அங்கிருந்து அது சூறையாடிப் போனபொருட்களோ இம்மட்டன்று. அதனாறதான் ஆஸ்திரிய சமாதான உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப்படுவதைக்காண அது மனங்கொள்வதாயில்லையாம். யுத்தம்முடிந்தபிறகு ஆஸ்திரியாவிலிருந்து ருஷியா சுரண்டிக்கொண்டுபோன பொருட்களின் பெறுமதி 27கோடியே 20 லட்சம் பவுண்வரையிலேயெனக் கண்டறியப்பட்டிருக்கிறது.

# ஜெருசலேமும் ரோமைநகரும்

S. Nicholas, O. M. I.
தமிழாக்கம் ஆசிரியர் வி. பி. மரியாம்பிள்ளை

இதுவரை மலைச்சிகரத்திலே தங்கியிருந்த எனக்குண்டான ஆனந்த வெள்ளத்திற்கு அளவேயில்லை. குதித்ததுபோன்று சட்டெனக் கீழேஇறங்கினேன். சம்பேதுருவானவர் மகாலயத்துள் சென்றேன். அஃது பிரமாண்டமான ஓர்கட்டடம். அவரதுகல்லறையைச்சூழத் தீபங்கள் எந்தவேளையுமே எரிந்துகொண்டிருக்கின்றன. அவரின் திருச்சுரூபமானது தினமும் அம்மகாலயத்தைத் தரிசிக்கத் திரண்டுவரும் யாத்திரிகர்கள் தொட்டுமுத்தமிடுவதால் தேய்ந்துபோயிருப்பதை அவதானித்தேன். சற்றே அண்ணாந்து மேல்நோக்கினேன். உலகஅதிசயங்களில்ஒன்றாய், எவரையுமே பிரமிக்கச்செய்வதாய், மிக்கேல் ஆஞ்செலோ என்ற பேரான சைத்திரிகரால் அழகுறஅமைக்கப்பெற்று வில்லைப்போலும் கவிந்துநின்ற மணிக்கோபுரத்தைக் கண்ணுற்று மகிழ்வெய்தினேன். சம்பேதுருவானவரை வதைசெய்த நீரோ எங்கேயென்று எட்டிப்பார்த்தேன். அவனது நிழல்தானும் காணப்படவில்லை. இவைகளையெல்லாம் படித்தபின்னர் திருச்சபை வெற்றிகொண்டதென்பதைத் தினையத்தனையும் மறுக்க எவருமே துணியார்? சத்தியதிருச்சபையின் சத்துராதிகள் முதலாய் இதற்குச் சாட்சியம் அளிக்கப்பின்வாங்கார். ஆயினும், அகந்தையே உருவான சாத்தான் தான்அடைந்த படுதோல்வியை ஒப்புக்கொள்ளவே மாட்டாது. பார்ப்போம், இனிமேலாவது பார்ப்போம் என்று இடையறாது இறுமாந்து வீரம் பேசத் தயங்கவே மாட்டாது. அந்தரங்கத்திலும், பகிரங்கத்திலும் சத்திய திருமறைக்கும் அதன் தொண்டர்களுக்கும் சதிசெய்துதீர வேண்டுமென்பதே அதன் சதாசிந்தனையாகும். ஆனால், தான் எடுக்கும் எடுப்புகளெல்லாம் விழலாகும் என்பதை அது ஒருபோதும் அறியாததுதான் அதிசயம்.

புதியசமயங்கள், நவீனகொள்கைகள் பலவற்றையும் பரப்பித் தன் சாதுரியத்தாலும், தந்திரசூழ்ச்சியாலும் வேதவிரோதிகள்பலரையும் தட்டியெழுப்பிக் கத்தோலிக்க திருமறைக்குச் சாமணிஅடிக்கச் சமயம்பார்த்துக்கொண்டே அது விழிப்பாயிருக்கின்றது. பூர்வீகவேதகலாபனை காலத்திற்போன்று இக்காலத்திலும் நீரோபோன்ற நிஷ்டூர நாஸ்திகர்கள் எங்கும்தோன்றியுள்ளார்கள். குறம்பெல், கோம்பஸ், வல்ரயர், ஹிற்லர், ஸ்ராலின் முதலாம் சர்வாதிகாரிகள் தங்கள் அதிகாரத்தையும், வல்லபத்தையுங்கொண்டு திருச்சபைமீது குண்டுமாரிபொழிந்தனர். இதோ, அதனைப் பரிநாசமாக்கி விடுகிறோம் என்று அறைகூவினர். ஆனால் அந்தோ! அவர்களின் அட்டகாசங்களும், கெட்டித்தனங்களும் காற்றோடுகாற்றாய்க் கலந்தன. அழிக்கமுனைந்த அவர்களே அழிந்தனர்.

கத்தோலிக்க திருச்சபையோ கற்பாறைபோன்று இன்றுமே அசையாத வச்சிரதம்பம்போல் விளங்குகின்றது. இலகுவிலே சத்துராதிகள் இடிக்கமுடியாத அரணென்று அகில முழுவதுமே அறிஞரால் புகழப்பெற்றுத் துலங்குகின்றது. இளம்பிறைச்சந்திரனைப் போன்று இன்றைக்குமே வளர்ந்துகொண்டுவருகின்றது. உலகில் காளான்கள்போன்று காலத்திற்குக்காலம் தோன்றும் சாஸ்திரவிற்பன்னர்களான சமயவிரோதிகளெல்லாம் ஓர்காலம் அழிந்தொழிந்துபோவது நிச்சயம். ஆனால், சத்தியதிருச்சபையோ ஒருபோதும் அழியவும், ஒழியவும்மாட்டாது. தேவசக்திவாய்ந்தஅத்திருமறை தேவதுரோகிகளுடைய சம்மட்டியின் தாக்குதல்களுக்குச் சற்றுமே நெகிழமாட்டாதென்பது சத்தியம். "சத்தியம்" என்றதும் சடுதியாக வானமேஇடிந்து என்மேல் விழுந்தாற்போல் பேரொலியொன்று எழக் கேட்டேன். திடுக்காட்டமுற்று கண்களைத் திறந்துபார்த்தேன். நான் இருப்பது என் வீட்டிலென உணர்ந்தேன். நான் கண்டதெல்லாம் கனவுபோல்தோன்றினும் காரியமெல்லாம் உண்மையெனக்கண்டேன். சுபம்!

## ஆவணிமாதம்

போதுக்கருத்து:— மணவாழ்க்கையானது சர்வேசுரன் விதித்த சட்டத்தின்படி நடைபெறத்தக்கதாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:— ஆஸ்திரேலியாவில் திருச்சபை செழித்தோங்கும்படியாக மன்றாடுவது.

## திருநாள் அட்டவணை

ஆவணிமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 7 | அ. கயித்தான், கு. | (வெ) |
| சனி | 8 | அ. சிறியாக்குசப்பர் | (சி) |
| ஞா | 9 | இஸ்பிரீத்து ஆகம. பின் 11-ம் ஞாயிறு — அ. வியான்னி அருளப்பர், து. | (ப) |
| திங் | 10 | அ. லவுறேஞ்சியார், வே. | (சி) |
| செ | 11 | அ. திபுர்சியார், வே. | (சி) |
| புத | 12 | அ. கிளாரம்மாள், க. | (வெ) |
| வி | 13 | அ. இப்பொலித்தார் | (சி) |

# சத்தியவேத பாதுகாவலன்

1953-ம் ஆண்டு

ஆவணி மாதம் 6-ந் திகதி

## வேலைநிறுத்த மதியீனம்

அரிசிக்கென வழங்கிவந்த உதவிமான்யத்தை அரசாங்கம் வெட்டிக்குறைத்ததையிட்டுப் பாராளுமன்ற எதிர்க்கட்சியினர்கள் ஆடு நனைகிறதேயென்று ஓநாய் உருகியழுதவாறாய், பொதுசனங்கள்மேல் உருகியழுது, அவர்களைத் தவறான பாதையில் வழிநடத்தி, இறங்காத்துறையில் கொண்டுபோய் இறக்கி, மதிமோசப்படுத்தி விடுவான் எடாதஎடுப்பு ஒன்றை எடுத்திருக்கின்றார்கள். இவர்கள் தூண்டிநடத்த முனைந்திருக்கும் ஒருநாள் வேலைநிறுத்தத்தாலே அரசாங்கம் பயந்துகலங்கிப் பழையபடி அரிசியின் விலையைப் படிஒன்று 25சதமாகக் குறைத்துவிடுமென்றநம்பிக்கையிருக்குமானால் — அன்றேல் ஊரைக்கலகப்படுத்திச் சுயகருமம்பார்ப்பதையே சுபாவமாகக் கொண்டுள்ள கம்யூனிஸ்த-சமசமாஜகட்சிகள் அரசாங்கம் வெட்டிக்குறைத்த உதவிமான்யத்தைத் தாங்களே பொறுத்து நிச்சயமாக உதவிசெய்ய முன்வருமென்ற நம்பிக்கையிருக்குமானால், துணிந்து வேலைநிறுத்தஞ்செய்யலாம். அல்லாவிடின் இந்தவிபரீத—மதியீன எடுப்பானது குளத்தைக்கலக்கிப் பருந்துக்கிரைகொடுக்கும் செயலாகவே முடியுமெனலாம்.

நிற்க, எதிர்க்கட்சிகளின் இந்த எடுப்பெல்லாம எதற்காக? அரிசிக்கு வழங்கப்பட்டுவந்த உதவிமான்யத்தை அரசாங்கம் வெட்டிக்குறைத்ததையிட்டு ஆட்சேபித்து எதிர்பேசுவதற்காகத்தானம். ஆனால், எதிர்பேசுவதும் வேறு. எதிர்ப்பதும் வேறு. வேலைநிறுத்தம் என்பது அரசாங்கத்தைஎதிர்ப்பதும், அதனை எதிர்த்துப் பழிவாங்குவதுமான ஓர் செயலேயாகுமன்றி எதிர்பேசுஞ் செயல்அன்று. அதனால் எதிர்க்கட்சிகளது ஏவுதலின்பேரிலே வேலைநிறுத்தஞ் செய்ய எவராவது முனைவார்களானல் பெரும் பாரதூரமான கெடுதிகள் ஏற்பட இடமுண்டாகும். ஏனெனில், வேலைநிறுத்தஞ் செய்வதென்றால் அன்று தினம் எவருமே வேலைக்குப் போகப்படாதென்றே — அதனால், அரசாங்க காரியாலயங்கள், கைத்தொழில், வர்த்தகஸ்தாபனங்கள், சந்தைகள், கடைகள், சாய்ப்புகள், கல்லூரிகள், பாடசாலைகள் ஆதியனவெல்லாம் மூடப்படவேண்டுமென்றே — பஸ்கள், றெயின்கள், வண்டிகள் ஆதியவற்றின் போக்குவரத்தெல்லாம் நிறுத்தப்படவேண்டுமென்றே பொருள்படும். அப்போது என்ன நடக்கும்? வேலைநிறுத்தஞ்செய்வாருக்கும், வேலைநிறுத்தஞ் செய்யாதாருக்குமிடையே பிணக்குஏற்படும். பெருங்கலகம்பிறக்கும். அன்று கோல்பேஸ்மைதானத்திலே எதிர்க்கட்சிகள்நடத்திய பெருங்கூட்டத்துக்குப்பின் நிகழ்ந்த சம்பவங்களே நாடுமுழுவதும் நடைபெறக்கூடிய பயங்கரநிலைமை தலைகாட்டும். பொலிஸர் குண்டாந்தடிகள், துப்பாக்கிகள், கண்ணீர்ப்புகைகளைப் பிரயோகிக்கவேண்டிய அவசியம் ஏற்படும. வேலைநிறுத்ததினமன்று இத்தகைய ஓர்நிலைமை சிலவேளை உண்டாகலாமென உத்தேசித்து அரசினரும், பொலிஸ்அதிகாரிகளும் தகுந்தநடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின்றார்கள். ஆனைதன்தலையில் மண்ணைத் தானேவாரி இறைத்தவாறாய் இந்த வேலைநிறுத்தம் இருக்குமென்பதை நன்குணர்ந்து அரசாங்க லிகிதர்கள்சங்கம் அதிற் கலந்துகொள்ள மறுத்துவிட்டது. இப்படியே மற்றும்அநேகசங்கங்களும், சமுதாயங்களும், ஸ்தாபனங்களும அதில் பங்குபற்றுவதில்லையெனப் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றன. இந்த வேளை கம்யூனிஸ்த – சமசமாஜ கட்சிகளும் வேலைநிறுத்தவிஷயமாய் வேற்றுமைகாட்டத் தொடங்கியிருப்பதிலிருந்து, தாங்கள் எடுத்தகாரியம் கைகூடாதென்பதை அவைகளும் கண்டுவிட்டனபோலும்.

கம்யூனிஸ்தருஷியாவிலே — அதன்கம்யூனிஸ்த தோழநாடுகளிலே இத்தகைய ஓர்வேலைநிறுத்தம் தொடக்கப்படுமானால் — நடத்தப்படுமானால் என்ன நடக்கும்? கம்யூனிஸ்தபட்டாளங்களும், தாங்கிகளும் வேலைநிறுத்தஞ் செய்வாரையெல்லாம் சுட்டுப்பொசுக்கி விடுமன்றோ! சோவியற்ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியிலே சமீபத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் கம்யூனிஸ்த அதிகாரிகள் எடுத்துக்கொண்ட கடினநடவடிக்கை இதற்குப் போதிய சான்றாகுமன்றோ! இலங்கையிலே எதிர்க்கட்சித் தலைவர்களின் நோக்கங்கள் பல்வேறுபட்டனவாகும். கம்யூனிஸ்த ருஷியாவும், சீனவும் போடுகிற தாளத்துக்கெல்லாம் இலங்கையைக்கூத்தாடச்செய்ய வேண்டுமென அவர்களில் ஓர் சாரார் நிற்கின்றனர். தனக்கு மூக்குப்போனாலும் சத்துராதிக்குச் சகுனப்பிழையாய் இருக்கச் செய்யவேணடுமென மற்றோர் சாரார் நினைக்கின்றனர். இதோ! வானத்தை வில்லாய் வளைக்கிறோம்; மணலைக் கயிறாய்த் திரிக்கிறோம்; ஒருஇரவிலே பூலோகசுவர்க்கத்தை இங்குசிருட்டித்து விடுகிறோமென மற்றுமோர் சாரார் முனைந்துநிற்கின்றனர். ஆனல், இவர்கள் ஓர்வெற்றிகண்டால்— அரசியற்கடிவாளத்தைப் பற்றிக்கொண்டால் வரப்போவது நரகந்தான். இவர்கள் தூண்டிவிட்டிருக்கும் வேலைநிறுத்தம் அரசியல சம்பந்தமானது. இது பொருளாதாரவிஷயமாய் எடுக்கப்படும் ஓர்நடவடிக்கையன்று. ஒரேநாளில் எல்லாத்தொழிலாளிகளையும் வேலைநிறுத்தஞ் செய்யப்பணணுவது, தொழிலாளர்தகராறு சம்பந்தமானதுமன்று. ஆதலால் அரசாங்கத்தின் தற்போதைய பணநெருக்கடியான காலதில் எவருமே போலிப்பிரசாரத்தில் ஏமாந்துபோகாது, ஊரிலே வீண்கலகங்கள், சச்சரவுகளை உண்டுபண்ணாது, அரசாங்கத்தை ஆதரித்து, இடதுசாரிகளின் கெடுதிக்குரிய இப்பிரயத்தனத்தை முறியடித்து, நாட்டின் சுபீட்சத்தை நிலைநாட்டுவதே மதியூகமானசெயலென்க.

## எதிர்க்கட்சியின் போக்கு

அரசாங்கம் அரிசிக்கு வழங்கிய உதவிமான்யத்தை வெட்டிக்குறைத்ததையிட்டு ஆட்சேபிக்குமுகமாகப் பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையிலுள்ள எதிர்க்கட்சிஅங்கத்தவர்கள் 28 பேரும் தங்கள்பதவிகளை இராசிநாமாச்செய்துவிட்டு மீளவும் தேர்தலுக்கு முன்வரவேண்டுமெனக் காலிப்பிரதிநிதியான திரு. டபிள்யு. தஹநாயக சென்றபுதன்கிழமை நடந்தேறிய எதிர்ககட்சிகளின் கூட்டத்தில் ஓர் பிரேரணையை எடுத்தாண்டனர். அரிசிக்கு வழங்கிவந்த உதவிமான்யத்தை வெட்டியதையிட்டு நாடுமுழுவதுமே எதிர்பேசுவதால் இராசிநாமாச் செய்யவேண்டியது அரசாங்கத்தின்கடமை; அவ்வாறு செய்ய அது மறுக்குமானல், தாங்களே இராசிநாமாச்செய்ய வேண்டியது எதிர்க்கட்சிஅங்கத்தவர்களின் கடமையாகும்; இவர்கள் ஒரேபந்துக்கட்டாய் இராசிநாமாச் செய்யுமிடத்து, அஃது இன்றுகுறைவுபடுகின்ற எதிர்க்கட்சிஐக்கியத்தை நிரூபித்துக்காட்டும் சிறந்த ஓர் மாதிரியாகும் என்றெல்லாம் ஆணித்தரமான ஆறுநியாயங்களை அவர்எடுத்துக்காட்டினர். ஆனல், இவைகள் எதிர்க்கட்சித் தலைவர்களின் செவிக்கேறவில்லை.

இராசிநாமாச்செய்தபின் ஒவ்வோர்கட்சியும் தனது தனித்தனித்திட்டத்தை நிறுத்திவிட்டுத் தற்போதையஅரசாங்கத்தைக் கவிழ்த்துவிடுமாறு பொதுத்திட்டம்ஒன்றை வகுக்கவேண்டுமென்று அக்கூடத்திலே திரு. சோமவீர சந்திரசிறீஎன்பார் ஓர்திருத்தப்பிரேரணையைக் கொண்டுவந்தார். இதுதானும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களது செவிக் கேறவில்லை. ஆமாம், இந்தஅரும்பாடுபட்டு — பதினாயிரக்கணக்கிலே பணத்தைத் அள்ளிச்செலவிட்டுப் பாராளுமன்றத்தில் பிரவேசித்தவர்கள் இராசிநாமாச் செய்வதென்றால் —பிறகும்தேர்தலுக்கு முற்பட்டுப் போட்டியிடுவதென்றால், கட்டியிருந்தபூனையைக் கட்டவிழ்த்துவிட்டுப் பிறகு வாஸ்பூஸ் என்றமாதிரியான வேடிக்கையாகத்தான் இருக்குமன்றோ! அதனால் இந்த 28 பேரில் எந்த ஒருவர்தானும் இராசிநாமாச் செய்வாரென்று நம்ப இடமுண்டா?

நிற்க, திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சிகளுள் எதிலுமேசேராத ஓர்சுதந்திர எதிர்க்கட்சிஅங்கத்தவர். இவரும் அந்தக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்து பேசியபோது: இந்தச்சங்கடமெல்லாம் எதிர்க்கட்சிகள் தங்களுள்தாங்களே 'குஸ்தி' போடுவதினால்தான்; ஓர்தலைவர் மக்களின் அரசாங்கத்தை (கம்யூனிஸ்த ஆட்சியை) நிறுவவேண்டுமென ஆலோசனை கூறினர். அதுபோலத்தான் அதேதலைவர் 24 மணிநேரத்தில சுவபாஷையை நடைமுறைக்குக்கொண்டுவருவதாகக கூறியிருக்கின்றார். கம்யூனிஸ்த கட்சியும, நவலங்கா சமசமாஜ கட்சியும் அற்பவிஷயங்களிற்தானும் உடன்பாட்டுக்குவர முடியாதிருக்கின்றன; அங்ஙனமாகத் தற்போதுள்ள எதிர்க்கட்சியினரிடம் அரசாங்கத்தை நம்பி ஒப்படைககமுடியுமா? என்பதுதான் அதிகமானமக்கள் கேட்குங்கேள்வி; ஏனெனில், நாம்எம்முளே ஐக்கியப்பட்டில்லைஎன்று உள்ள இரகசியங்களை ஒன்றும்ஒளியாமல் கொள்ளாமல் உள்ளபடியேகூறி எதிர்க்கட்சியினரின் நிலைமையை அம்பலப்படுத்தி விட்டனர். கடைசியாக இராசிநாமாச்செய்யும் விஷயத்தைத் தத்தம்கட்சிகளுடன் ஆலோசித்துத்தான் முடிவுசெய்வதனெக் கூறப்பட்டுப் பூனைக்குமணிகட்டமுனைந்த சுண்டெலிகளின் கூட்டம்போல இவர்களின்கூட்டமும் இனிதே கலைந்தது.

### இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்

## 11-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மாற். 7: 31—37)

அர்ச். மாற்கு எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி:—அந்தக்காலத்திலே, யேசுநாதர் தீரின் எல்லைகளைவிட்டுப் புறப்பட்டு, சீதோன் வழியாகத் தெக்கப்போலி நாட்டின் எல்லைகளின் நடுவே கலிலேயாக் கடலருகே வந்தார். அங்கே, ஊமையனும் செவிடனுமான ஒருவனை அவர் சமுகத்தில் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன் மேல வைக்கும்படி அவரை மன்றாடினார்கள். அவர் அவனைச்

சனக்கூட்டத்திலிருந்து தனியே அழைத்துக்கொண்டுபோய், அவனுடைய செவிகளுள் தமது விரல்களை வைத்து, உமிழ்ந்து அவன் நாவையும் தொட்டு, வானத்தை அண்ணந்து பார்த்து, பெருமூச்செறிந்து எப்பெத்தா என்று அவனுக்குச் சொன்னார். அதற்குத் திறக்கப்படு என்றர்த்தமாம். அக்ஷணமே அவனுடைய செவிகளும் திறக்கப்பட்டு, அவன் நாவின் கட்டும் அவிழ்ந்துபோக, அவன் செவ்வையாய்ப் பேசினான். இதை எவனுக்கும் சொல்லாதபடி அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆயினும், அவர் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதைப் பிரசித்தம்பண்ணி: இவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் செய்தாரென்று சொல்லி மேன்மேலும் அதிசயப்பட்டார்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.



# சதாசகாயமாதா கோணம்

## மூன்றுபிரியதத்த மந்திரம்

நாள்தோறும் காலையும் மாலையும் மாதாவின் மகிமைக்காக மூன்றுபிரியதத்தம் சொல்லிவருவது ஒரு உத்தம பத்திமுயற்சியாகும். இது மிக இலேசானதும், சகலராலும் எளிதில் அனுசரிக்கப்படக் கூடியதுமாகும். இயன்றமட்டும் முழந்தாளிலிருந்து சொல்வதே அதிஉத்தமமாகும். மூன்று பிரியதத்தமந்திரங்களுடன் "மாசில்லாமல் உற்பவித்த மரியாயே, உம்முடைய சகாயத்தைத் தேடிவரும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்ற மனவல்லயச்செபத்தையும் சேர்ப்பது உசிதமாகும். "மரியாயே, என் நல்ல தாயாரே! இந்நாளிலே எந்தச்சாவானபாவத்திலிருந்தும் என்னைத்தற்காத்துக்கொள்ளும்" என்ற செபத்தைப் பிரியதத்தமந்திரங்களின்பின் சொல்லும்படி அர்ச். லிகோரியார் நன்மதி கூறியிருக்கிறார்.

மூன்றுபிரியதத்த மந்திரப் பத்திமுயற்சியை ஆகமுதன்முதல் பரப்பி வந்தவர் அர்ச். பதுவை அந்தோனியார். தேவமாதாவின் கன்னிமையைச் சங்கிக்கவும், ஆத்தும, சரீர பரிசுத்ததனத்தைப் பேணிக்கொள்ளவுமாக இப்பத்திமுயற்சியை அனுசரிக்கும்படி அர்ச். அந்தோனியார் ஏவிவருவார். இவருக்குப்பின் அர்ச். லேயோனுட் இரவும் பகலும் சாவானபாவத்தை விலக்கும்படி இந்த மூன்று பிரியதத்தப்பத்திமுயற்சியை அனுசரிக்கும்படி பிரசங்கித்து வந்தார்.

இந்தப் பத்திமுயற்சியை அனுசரிப்பதில் தொடர்ந்து பிரமாணிக்கமாயிருப்பவர்கள் இரட்சணியம் அடைவது நிச்சயம்என்றும அவர்போதித்து வந்தார். இப்பத்திமுயற்சியை அனுசரிக்கும்படி அர்ச். லிகோரியார் அடிக்கடி நல்லஆலோசனை கூறிவந்தது மாத்திரமல்ல, அதனை அனுசரிக்கும்வழக்கம் இல்லாத ஊர்களிலே அதனைப் பாவசங்கீர்த்தனத்தில் அபராதமாக விதித்தும்வந்தார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளையும், ஆத்துமகுருமார் தங்களிடம் பாவசங்கீர்த்தனஞ் செய்பவர்களையும் இவ்விஷயத்திற் கவலையுடன் கண்காணித்துவரும்படி அவர் வெகு ஆத்திரத்துடன் ஆலோசனை கூறிவந்தார். அர்ச். லெயோனுட்டைப்போலவே அர்ச். லிகோரியாரும், பாவிகளும் புண்ணியவான்களும், வாலர்களும் கன்னியர்களும், ஆடவரும் மாதரும், சிறுவரும் சிறுமிகளுமாகிய சகலருமே இத்தப்பத்திமுயற்சியை அனுசரித்துவரும்படி வற்புறுத்திவந்தார்.

இந்தப்பத்திமுயற்சி அனுசாரத்தால் அடைந்துகொண்ட நன்மையைஎடுத்துக்காட்டும் உண்மைச்சம்பவம்ஒன்று பின்வருவது:

பிறசெல்ஸ்நகரத்தில் துன்மார்க்கரான இரண்டுவாலிபர்கள் இருந்தார்கள். ஒருநாள்இரவு இவர்கள்இருவரும ஒருவீட்டிற்புகுந்து மகாஅருவருப்பான பாவங்களைக் கட்டிக்கொண்டார்கள். அதன்பின்பு ஒருவன் அங்கிருக்க, மற்றவன் புறப்பட்டுப்போய் விட்டான். வெளியேபோனவன் தன் வீட்டைச்சேர்ந்து படுக்கைக்குப்போகுமுன், தான்வழமையாகச் சொல்லிவரும் மூன்றுபிரியதத்த மந்திரங்களைச் சொல்லவில்லைஎன்பதை நினைத்தான். நன்றாய்இளைத்துக் களைத்துப்போயிருந்தாலும், ஒருவகையாகத் தன்னைமேற்கொண்டு அந்த மூன்றுபிரியதத்தமந்திரங்களையும்சொல்லிவிட்டுச் சரிந்துபடுத்தான். படுத்தக் கண்உறங்குது உறங்காமுன் யாரோஒருவர் தன் அறைக்கதவில் படார் படார்என்று தட்டும் சத்தங் கேட்டான். கேட்டதுங் கதவைத் திறந்தான். அப்போது அவன் பயங்கரமான காட்சிஒன்றைக் கண்டான்.

(தொடரும்)

## சுதந்திர வெற்றி முழக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பை முறியடிக்க 22 நாடுகள் எழுவானேன்? அவற்றிற்கு ஊக்கம்ஊட்டியது யாது? அதுவே 2-வது மகாயுத்தத்தின் பிற்காலவிளைவாகத் தோன்றியஉணர்வு. அதாவது, நாடெங்கும் வாழக்கேடொன்றும் இல்லைஎன்றபடிப்பினை. இன்றைய உலகிலே ஒருவர்தாழ்ந்து மற்றவர் வாழ்ந்திருக்கமுடியாது. சமாதானத்துக்காகச் செயல்புரியத் தயங்கினல், சமாதானத்தைக் காக்கமுடியாது. உலகின் ஓரிடத்தில் சமாதான பங்கம் ஏற்பட்டால், அது உலகையே பாதிக்கும். ஆக்கிரமிப்பை முளையிலே கிள்ளியெறிய முனைய வேண்டும். இந்தஉணர்வுதான் சுதந்திரநாடுகளைக் கோறியாவில் சுதந்திர இலட்சியத்தின் சார்பாக ஒன்றுசேர்த்தது. ஒன்று சேர்ந்ததினல்தான் இன்று கோறியா ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டுள்ளது. கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டுள்ளது. இது சுதந்திரமாந்தரின்வெற்றிமுழக்கம். சுதந்திரசக்திகளின் ஜெயபேரிகைஎன்பதில் சந்தேகம் என்ன?

## புதுக்குடியிருப்புத் தபால்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஐக்கியதினக் கொண்டாட்டம் சென்றஆடி 4-ந் திகதிதொடங்கி 11-ந் திகதிவரை நடந்தேறியது. 4-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் விளையாட்டு மைதானத்தில் நடந்தபெருங்கூட்டத்திற்கு வண. அல்பேட்பெறேறாசுவாமியார் தலைமைவகித்தனர். ஆரம்பத்தில் பாடசாலைச்சிறார்களின் நடனங்கள், பாட்டுகள், நடித்தல்கள் பாராட்டத்தக்கவகையில் நடைபெற்றன. தலைவர்சுவாமியார் தமது ஆரம்பவுரையில் ஐக்கியத்தின் அவசியம், ஐக்கியம்ஒன்றே அகிலஉலகையும் கட்டியாளும் சக்திவாய்ந்தது என்னும்பொருள்படச் சிறப்பாகப்பேசினர். அதன்மேல் ஆசிரியர் திரு. பி. அருளானந்தம், திரு. எஸ். கந்தையா என்பவர்கள் ஐக்கியத்தின் அவசியத்தைப் பற்றி உணர்ச்சிததும்பப் பேசினார்கள். பின்னர் ஐக்கியபரிசோதகர் திரு. வி. எச். பாலசுந்தரராசா அவர்கள் புதுக்குடியிருப்பு ஐக்கியமுயற்சிகளை வியந்து, ஐக்கியத்தினல் ஏற்பட்ட அப்பெருங்கூட்டத்தின் நிகழ்ச்சிகளைப் புகழ்ந்து நன்றியுரைகூறினர். அவ்வேளைநடந்தேறிய நடித்தல், பாட்டுக்கள், நடிப்புகளில் திறமைகாட்டியவர்களுக்குத் தலைவர்சுவாமியாரால் பரிசுகள்வழங்கப்பட்டன. ஈற்றில் தோட்டோபசாரணையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

— நிருபர்

# ஞானேபதேசப் பரீட்சைப் பேறுகள்—1952

## இல்லற ஆசிரியர் தலைமைவகிக்கும் பாடசாலைகள்

### பாடத்திட்டம் A.

#### S. S. C. வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் சாதனை கழகம் | செ. சிறில் | புள்ளி—82 |
| 2-ம் பரிசு | ,, ,, ,, | நா. டேவிற் | ,, —81 |

#### J. S. C. வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | புங்குடுதீவு கலவன் பாடசாலை | சூ. அல்போன்ஸ் | புள்ளி—80 |
| | ,, ,, ,, | வி. அமிர்தவாசகம் | ,, —80 |
| | மன்னர் நல்லாயன் ஆண்பாடசாலை | சீ. சேகரம் | ,, —80 |
| 2-ம் பரிசு | புதுக்குடியிருப்பு கலவன் பாடசாலை | ம. ஞானப்பிரகாசம் | ,, —78 |

#### 7-ம் வகுப்பு

மாணவர் ஒருவரும் 60 புள்ளி எடாததினல் பரிசு அளிக்கப்படவில்லை

#### 6-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | பெரியகுஞ்சுக்குளம் கலவன் பாடசாலை | செ. பறுநாந்து | புள்ளி—77 |
| 2-ம் பரிசு | ,, ,, | செ. பிரான்சீஸ்கம்மா | ,, —71 |

#### 5-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | கட்டைக்காடு கலவன்பாடசாலை | ம. திரேசாஇரத்தினசோதி | ,, —83 |
| 2-ம் பரிசு | பெரியவிளான் கலவன் பாடசாலை | ப. மேரிமெக்டலீன | ,, —78 |

#### 4-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | அச்சுவேலி வடக்கு கலவன்பாடசாலை | ம. ஆதிக்கம் | ,, —94 |
| 2-ம் பரிசு | சிலாபத்துறை கலவன்பாடசாலை | அ. சவிரிமுத்து | ,, —86 |

#### 3-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | சிலாபத்துறை கலவன் பாடசாலை | கி. ஜெயராணி | ,, —99 |
| 2-ம் பரிசு | தாழ்வுபாடு கலவன் பாடசாலை | ம. செபஸ்ரியான் | ,, —98 |
| | கிளாலி கலவன் பாடசாலை | றை. திருஞானம் | ,, —98 |

## சந்நியாச ஆசிரியர் தலைமைவகிக்கும் பாடசாலைகள்

#### S. S. C. வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | கரம்பொன் பெண்பாடசாலை | சூ. மரிஸ்ரெல்லா | புள்ளி—92 |
| 2-ம் பரிசு | நாரந்தனை ,, | பா. மேரிஹூடா | ,, —91 |

#### J. S. C. வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | யாழ்நகர் திருக்குடும்ப கன்னியர் மடம் | அ. பிலோமினு | புள்ளி—72 |
| | இளவாலை ,, ,, ,, | போ. தீற்று | ,, —72 |
| | மானிப்பாய் கலவன் பாடசாலை | செ. செல்லம்மா | ,, —72 |
| | மயிலிட்டி ,, ,, | பி. செல்வநாயகம் | ,, —72 |
| 2-ம் பரிசு | இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் | அ. ஜெனேவா | ,, —70 |

#### 7-ம் வகுப்பு

மாணவர் ஒருவரும் 60 புள்ளி எடாததினல் பரிசு அளிக்கப்படவில்லை

#### 6-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | மாதகல் பெண் பாடசாலை | A. அந்தோனிலற்றிசியா | ,, —80 |
| 2-ம் பரிசு | ,, ,, ,, | S. லூட்ஸ்ஜெயறூட் | ,, —75 |

#### 5-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | முல்லைத்தீவு பெண்பாடசாலை | கா. மரியலொறெற்றே | ,, —89 |
| 2-ம் பரிசு | ,, ,, ,, | ச. பிரான்சிஸ்கா | ,, —84 |

#### 4-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | ஊர்காவற்றுறை பெண் பாடசாலை | அ. மேரிதிரேஸ் | ,, —87 |
| 2-ம் பரிசு | அடைக்கல நாயகி கலவன் பாடசாலை | ம. அலிஸ்ரன் | ,, —85 |

#### 3-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | கரையூர் பெண் பாடசலை | அ. அந்தோனியாப்பிள்ளை | ,, —93 |
| 2-ம் பரிசு | பருத்தித்துறை கலவன் பாடசாலை | பா. பிலோமினு | ,, —92 |

### பாடத்திட்டம் B.

#### 5-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | தாழ்வுபாடு கலவன் பாடசாலை | சி. வியாகுலம் பீரிஸ் | ,, —69 |
| 2-ம் பரிசு | ,, ,, ,, | சி. எட்வீஸ்பெரோரா | ,, —68 |

#### 4-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | உரும்பிராய் கலவன் பாடசாலை | சூ. சின்னமலர் | ,, —87 |
| 2-ம் பரிசு | பாப்பாமோட்டை கலவன் பாடசாலை | ச. சவிரியான் | ,, —77 |

#### 3-ம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | முள்ளிக்குளம் கலவன் பாடசாலை | பிலோமினு குருஸ் | ,, —96 |
| | சாவகச்சேரி ,, ,, | அ. லூசியா | ,, —96 |
| 2-ம் பரிசு | இரணைதீவு ,, ,, | வ. பத்திநாதர் | ,, —95 |
| | கலட்டி ,, ,, | பி. அலோசியஸ் | ,, —95 |

**T. A. J. Mathuranayagam**
*Gen. Manager, R. C. Schools.*

Jaffna 4-8-53



# பாலர்  பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

உங்கள் எல்லோரிடமும் பல நற்குணங்கள் உண்டு என்பது சொல்லாமலே விளங்கும். ஆனால், துர்க் குணங்களும் இருக்கத்தான் செய்யும். அவைகள் தான் எங்கள் ஞானப் பூஞ்சோலையாகிய ஆத்துமத்தில் புண்ணியங்கள் எனப்படும் நறுமலர்களுக்கிடையில் காணப்படும் அவலட்சண களைகள், பூண்டுகளாகிய பாவங்கள்.

நல்ல தோட்டக்காரர் போன்று எங்கள் தோட்டத்தில் களை பிடுங்க இடையிடையே நல்மனம், ஒறுத்தல் எனப்படும் ஆயுதங்களை உபயோகிக்க வேண்டும். நான் எழுதுவது போல இந்த வேலை எளிது அல்ல. அதில் கஷ்டமான மூச்சுப் பொறுக்கும் வேலை உண்டு. ஆயினும் முழங்கால்களை நிலத்தில் ஊன்றிக் கொண்டு இருகைகளாலும் பிடித்து இழுத்து ஆழமாய் வேர்விட்டிருக்கும் பாவக் களைகளையும் கூட வேருடன் களைந்து விடுங்கள். கஷ்டத்தைப் பாராமல் எமது ஆத்தும நன்மைக்காக இப்படிச் செய்யவே வேண்டும். பெரிய களைகளை மாத்திரம் அல்ல, சிறு பூண்டுகளையும் பிடுங்கிவிட வேண்டும். ஏனெனில், அவைகளை அலட்சியமாய் வளர விட்டால், அவைகள் வீறுகொண்டு நொய்மையான பூக்கன்றுகளான புண்ணியங்களை அழித்துவிடும்.

"ஒரு துர்ப் பழக்கத்தை எதிர்த்துக் களையாவிடில் அது சீக்கிரம் எங்களைப் பலவந்தப் படுத்தும்" என்கிறார் அர்ச். அகுஸ்தீன்.

வணக்கம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா

## நான் யார்?

— I —

ஆறுங் குளமும் என்வீடு
ஆழக் கடலும் என்வீடு
வேறோர் உருவம் பெற்றவுடன்
விண்ணிற் கேகும் பேறுடையேன்.

— II —

வாழும் உலகம் என்னாலே
வளமும் புகழும் என்னாலே
பாழும் பஞ்சப் பிணியெல்லாம்
பாரில் ஒழியும் என்னாலே.

— III —

உள்ளங் குளிரச் செய்திடுவேன்
உஷ்ணந் தணியச் செய்திடுவேன்
வெள்ளம் பெருகச் செய்திடுவேன்
விளைவும் பெருகச் செய்திடுவேன்.

— IV —

உலகின் பயிர்கள் என்செல்வம்
உயிர்கள் யாவும் என்செல்வம்
புலவர் என்னை அமிழ்தென்பார்
புதல்வா! என்னைத் தெரிகிறதா?

'ஜெயம்'

## அடிமைச் சிறுவன்

அர்ச். பற்றிக் ஒரு சிறுவனாக இருந்தபோது அவர் ஓர் அடிமையாகப் பிடிக்கப்பட்டு அயர்லாந்து நாட்டுக்குப் பலவந்தமாகக் கொண்டுபோகப் பட்டார். அங்கே தனது எசமானின் ஆடுகளை மேய்க்கும்படி கட்டாயப் படுத்தப் பட்டார். ஆனால், சில நாட்களின்பின் அவர் தன் வீட்டுக்கு ஒளித்து ஓடிப்போய் விட்டார். என்றாலும் தான் அங்கு வசித்திருந்த நகரிலே தான் அடிமையாகச் சீவித்த காலத்தை அவர் ஒருபோதும் மறக்கவில்லை. திரும்பவும் அந்த நகருக்கு அவர் சென்றார். அங்குள்ள மக்களுக்காக உழைக்க வேண்டுமெனத் தனக்குள் தீர்மானித்தார். அநேக வருடங்களுக்குப்பின் பற்றிக் ஒருகுருவானவர் ஆனார். அதன்பின் மேற்றிராணியார் ஆனார். அதன்பின் அயர்லாந்து நாட்டுக்கே மிஷனரியாக அனுப்பப் பட்டார். முப்பது வருடங்களாக அந்த நாடு எங்கும் சுற்றித்திரிந்து வேதத்தைப் போதித்தார். அவர் மரிக்கும் போது அயர்லாந்து மக்கள் எல்லோரும் கத்தோலிக்காக இருக்கும் பாக்கியம் கிட்டியது. இன்றைக்கும் இவரே அயர்லாந்தின் அப்போஸ்தலர் என்று அழைக்கப் படுகிறார்.

— எம். ஜே. எம்.

## வயோதிபரின் சந்தேகம்

ஒவ்வோர் ஞாயிறுவாரமும் தவறாது ஓர்வயோதிபர் பூசைகண்டு வருவார். ஓர்கிழமை குருவானவர் பாவியின் ஆத்துமம், செத்துப் புழுத்துத் துர்நாற்றம் வீசும் பிணத்துக்குச் சமானம் என்று பிரசங்கம்செய்தார். ஆனால், வயோதிபர் அதன் பொருளை அறிய முடியாது "அப்படி உயிரோடு இருக்கும் எந்தப் பாவியிலும் பிணநாற்றம் வீசியதை இதுவரை நான் கண்டதும் இல்லையே; என் தலைமயிர் யாவும் நரைமயிர் ஆகியும் இதுபோன்ற ஓர்கதையை நான் கேள்விப்பட்டதும இல்லையே; இது கட்டுக் கதையோ, அன்றேல் சுவாமியாரின் கற்பனையோ" என்று சிந்தனை செய்துகொண்டு வீட்டுக்குப் போனார். போகும்போது இடைவழியில் அவருடன் ஓர்இளம் வாலிபனும் ஒன்றுகூடவே இருவருமாகப் பயணம் செய்தனர்.

அப்போது வழியிலே ஓர்மாடு செத்து அழுகிய நிலையில் இருந்தது. அதன்நாற்றமோ தாங்க முடியாததால் வயோதிபர் தனதுமூக்கை இறுகப் பொத்திக் கொண்டார். வாலிபனோ அவ்வாறு செய்யவில்லை.

பிறகும் சொற்பதூரம் சென்றதும் ஓர் அழகிய வாலிபன் குதிரைமீது வந்தான். அவன் கிட்ட வருமுன்னமே அவன் பூசியிருந்த பரிமள தைலத்தின் வாசனை மூக்கைத் துளைத்தது. வாலிபனைக் கண்டதுமே வயோதிபருடன் சென்ற வாலிபன் தனது மூக்கை மாத்திரம் அல்ல, முகத்தையுமே பொத்தி அரோசிகங்கொண்டு மறுபக்கமாய்த் திரும்பினான்.

அப்போது வயோதிகர் தன்னுடன் வந்த வாலிபனின் விபரீத செயலைக் கண்டு ஆச்சரியம் கொண்டவராய் அவனை நோக்கிச் சொல்வார்: "வாலிபனே! உன்செயல் பெரும் நூதனமாய் இருக்கிறதே; காரணம் என்ன?" என்றார்.

அதைக் கேட்ட வாலிபன் அவரை நோக்கி: "வயோதிகரே! குதிரைமேல் வந்த வாலிபன் பாவத்தின் மேல் பாவஞ்செய்து பெரும் பாவியானான்; திரும்பவும் பாவஞ் செய்யவே ஓடிப்போகிறான்; தனது ஆத்துமத்தைப் பாவத்தால் பிணமாக்கித் துர்நாற்றம் உண்டாகச் செய்தபடியால் அப்பாவியின் முகத்தை முதலாய்ப் பார்ப்பதே பாவம்என்று என்கண்களை மூடிக்கொண்டேன். தனது துர்நாற்றத்தை மறைக்கப் பரிமளதைலத்தைப் பூசிக் கொண்டான்; ஆனால் அந்தப் பகுத்தறிவு இல்லாத பிராணியின் பிணமானது துர்நாற்றம் வீசவில்லை; அது ஓர்பாவமும் அறியாத பிராணி; சருவேசுரனின் நியதிப்படி வாழ்ந்து இறந்த மிருகம்" என்று சொல்லி மறைந்து போனான்.

அப்போதுதான் அவ்வயோதிகர் குருவானவர்கூறிய வாக்கின் பொருளைக் கண்டுபிடித்துச் சந்தோஷமாய்த் தன் வீடுபோய்ச் சேர்ந்தார்.

ஜேம்ஸ் அல்போன்சா செல்லக்கிளி
றோ. க. பாடசாலை,
முல்லைத்தீவு.

## நாட்டுப்பற்று

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும், நற்றவ வானிலும் நனி சிறந்தவை" என்ற மொழிப்படி, தாயைப் போலவே சுயநாடும் என்பது புலனாகிறது. அதனால் மக்கள் எவ்வளவாகச் சுயநாட்டுப் பற்றுடன் நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்பதும் தெளிவாகிறது. சொந்த நாட்டுக்காகச் சந்ததம் உழைத்து உயர்வு கண்டோர் உலகிற் பலர். நாட்டினது சேவைக்காகத் தம்முயிரையே அர்ப்பணித்த உத்தமர் அநேகர்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று பாடினார் பாரதியார். அவரது பாடல் வாயிலாக அவரின் தேசபக்தி எவ்வளவு அணை மீறுகின்றது. ஆனால், அவர் மாத்திரம் தேசபக்தி—தேச அபிமானம் கொண்டவர் எனக் கொள்வது தவறு. அவரைப் போலவே அநேக மகான்கள் தங்கள் அருமை நாட்டுக்காக உழைத்து அவனியில் புகழ்பெற்றனர். அவர்களின் சரித்திரங்களை—அரிய வாக்குகளைப் புத்தகங்கள், பத்திரிகைகளில் வாசிக்கிறோம். அவர்களின் உணர்ச்சி ததும்பும் உபதேசமொழிகள் நம்மிலே உணர்ச்சியை எழுப்பாமல் இல்லை. இவ்வித உணர்ச்சி பிறந்தும் அநேகர் எப்படி நாட்டுக்காக உழைப்போம் என்று அறிகிறார்கள் இல்லை. பலரும் சுயநலம் கருதாது பொதுநலம் கருதிச் சோம்பலை ஒழித்துத் தேச அபிமானம் என்னும் தூய சிந்தையோடும், தியாக சிந்தையோடும் உழைக்கும் போது அது நாட்டின் முன்னேற்றத்துக்கு அறிகுறியாகும். "நாட்டு மக்களின் சிறப்பே நாட்டின் சிறப்பு"

ஜேம்ஸ் ஊர்சுலா
கருக்குப்பனை

## உலகமாவது என்ன?

ஆஸ்தியைச் சேர்க்கும் இடம் என்பான் ஐசுவரியவான்.

நரை மயிராக்கும் இடம் என்பான் வயோதிகன்.

தங்கம் எடுக்கும் சுரங்கம்என்பான் உலோபி.

விளையாட்டு ஸ்தலம் என்பான் பள்ளிப் பையன்.

நடனசாலை என்பான் டம்பச்சாரி.

உல்லாச மண்டபம் என்பாள் வாலிபப்பெண்.

தூங்குவதற்கேற்றஇடம் என்பான் சோம்பேறி.

போர்க்களம் என்பான் போர்ச்சேவகன்.

கண்ணீர் சொரியும் பள்ளத்தாக்கு என்பாள் கைம்பெண்.

பேர்வாங்கும இடம்என்பான் பிரதமமந்திரி.

ஆஸ்பத்திரி என்பான் நோயாளி.

பரலோகத்திற்கு ஆயத்தமாக்கும் இடம்என்பான் ஞானபோதகன்.

கிறிஸ்துவைப் பிரதிபிம்பிக்கும் இடம்என்பான் கிறிஸ்தவன்.

ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணும் இடம்என்பான் தேவஊழியன்.

இதை வாசிக்கிறவனே உலகம் எப்படிப்பட்டதென்று உனக்குத் தோன்றுகிறது?

(உ. தா.)

## உங்களுக்குத் தெரியுமா ?



**1.** வத்திக்கான் இராச்சியத்தின் குடிசனத்தொகை என்ன ?

சென்றஜூனிமாதம் எடுக்கப்பட்ட கணக்கின்படி அதன்குடிசனத்தொகை 1,031. இவர்களில் ஆடவர்கள் 750 பேர். பெண்கள் 281 பேர். இவர்களெல்லாம் 15 நாடுகளைச் சேர்ந்தவர்கள். பெண்களைக்காட்டிலும் ஆடவர்களை அதிகமாகக் கொண்டனவாய் உலகிலுள்ள சிலநாடுகளில் வத்திக்கானும் ஒன்றாகும்.

**2.** பிரித்தானியர்கள் வருடம் ஒன்றுக்கு நாய்கள் பூனைகளைவளர்க்க எத்தனைபவுண் செலவிடுகின்றார்கள் ?

20 கோடியே 40லட்சம்பவுண் செலவிடுகின்றார்கள். பிரித்தானியிலே சராசரியாக ஐந்துகுடும்பங்களுக்கு ஒரு நாய்விகிதம் 40 லட்சம் நாய்கள் இருக்கின்றன. அவற்றுடன் ஆறரைலட்சம் பூனைகளும் இருக்கின்றன.

**3.** சிங்சிங்என்பது என்ன ?

இது அமெரிக்கஐக்கிய தேசத்திலே நியூயோக்நகரிலிருந்து வடக்கே 30 மைல் தூரத்தில் ஒசினிங்எனுமிடத்திலுள்ள பேரான ஓர் சிறைச்சாலையின் பெயர். மரணதண்டனை விதிக்கப்படுகிறவர்கள் இங்குள்ள மின்சார நாற்காலியில் இருத்திக் கொல்லப்படுவர்.

**4.** எங்காவது வண்டிகளை இழுப்பதற்கு நாய்களும் உபயோகப்படுகின்றனவா ?

ஆம். எஸ்கிமோசாதியினர் தங்கள் சறுக்குவண்டிகளை இழுப்பதற்கு நாய்களை உபயோகிக்கின்றனர். ஒரு நூற்றாண்டின்முன் இங்கிலாந்திலும் வண்டிகளை இழுக்க நாய்கள் உபயோகிக்கப்பட்டன.

**5.** முதன்முதலாக ஆகாயத்தில் பறந்தவர் யார் ?

பிலாறே டி றோசியர் என்பவரே. இவர் 1783-ம் ஆண்டு 74அடி உயரமும், 48அடி அகலமுமான ஓர் புகைக்கூண்டில் 3,123அடி உயரத்துக்குச் சென்று முக்கால்மணித்தியாலத்திலே 15மைல்தூரம்பறந்து கீழேஇறங்கினார்.

**6.** "உங்கள் இருதயங்களில்—உங்கள் இல்லங்களில்—உங்கள்நாட்டில் நீங்கள் சமாதானத்தை விரும்பினால் ஒவ்வோர் மாலைவேளையும் செபமாலை சொல்ல ஒன்றுசேருங்கள்" என்று சொன்ன பாப்பானவர் யார் ?

11-ம் பத்திநாத பாப்பானவர்.

**7.** செபமாலையைப்பற்றித் தற்போதைய 12-ம்பத்திநாத பாப்பரசர் யாது கூறியிருக்கின்றார் ?

"செபமாலையானது எல்லோருக்குமே கிறீஸ்தவ வாழ்க்கையின் மகாசித்திகரமான பாடசாலையாய் இருக்கின்றது" எனக் கூறியிருக்கின்றார்.

**8.** றோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலுள்ள அர்ச். பேதுருவானவர்சுரூபம் எத்தனைவருடங்களுக்கு முற்பட்டது ?

600 வருடங்களுக்கு முற்பட்டதாகும். வருடந்தோறும் அர்ச். பேதுரு, பாவிலு அப்போஸ்தலர்களின் திருநாளன்று பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் இச்சுரூபத்தின் பாதத்தை முத்தமிட்டபின் அவரது கல்லறை சென்று செபஞ்செய்வார்கள்.

**9.** ஸ்பானியதேசத்தின் பாதுகாவலர் யார் ?

சந்தியோகுமையோர்என அறியப்படுகிறவரான அர்ச். பெரியயாகப்பரே.

**10.** றோமையின் ஆசனக்கோவில் எது ?

அர்ச். லத்தறன் அருளப்பர் மகாலயமே.

## நாளு சங்கதிகள்

— தேவமாதா அமலோற்பவியாக உற்பவித்தாரென்பது விசுவாசசத்தியமாகப் பிரகடனஞ்செய்யப்பெற்ற நூறும்ஆண்டாகிய அடுத்த வருடத்திலே முதன்முதலாக முத்திப்பேறு பெற்றபட்டம் அருளப்படவிருப்பவர் அர்ச். ஜோண்பொஸ்கோவைத் தொடர்ந்து சலேசியன்சபைத் தலைவராக வந்த ஆசா. மிக்காயேல் றூவாசுவாமிகளும், ஆசா. எலெனு குலேறுவுமே.

— எலிசபேத் மகாராணியார் லண்டன்நகரிலே முடிசூடியபின் ஸ்கொத்லாந்தின் தலைப்பட்டணமாகிய எடின்பேர்க்நகருக்கு விஜயஞ்செய்தபோது, அங்கும் சென். ஜில்ஸின் ஆசனக்கோவிலில் நடந்தேறிய வைபவத்தில் அவருக்கு வழங்கப்பெற்ற வாளும், செங்கோலும், அப்போது முறையே இரண்டாவது ஜூலியஸ் பாப்பானவராலும், ஆறுவது அலெக்சாண்டர் பாப்பானவராலும் ஸ்கொத்லாந்துக்குச் சன்மானிக்கப்பட்டனவாகும்.

— ஓர்பரிஸ்றராய், ஒக்ஸ்போட்சர்வகலாசாலைப் பட்டதாரியாய், ஓர்கவிஞராய், யப்பானிலே ஓர்ஆங்கிலபோசிரியராய் விளங்கியிருந்து சிலவருடங்களின்முன் புறொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பியவரான திரு. றெபேட் ஸ்ருவாட்அவர்கள் ஸ்கொத்லாந்ததேச அவர்டீனநகரில் வால்ஷ் மேற்றிராணியாரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். இவருக்குவயசு 50.

— ஒற்றுவாநகர் அதிமேற்றிராணியாராயிருநது காலஞ்சென்ற வாச்சன் ஆண்டவரினிடமாகச் சர்வதேச சற்பிரசாதமகாநாட்டு நிரந்தரகம்மிற்றியின் தலைவராகக் கோவைநகர் அதிமேற்றிராணியாரும், கிழக்கிந்திய நாடுகளின் பத்திரியாக்குவுமான மகாமேன்மைதங்கிய டாகொஸ்ரா நூனஸ் ஆண்டவரைப் பாப்பரசர் நியமனஞ் செய்திருக்கின்றார்.

— "தொழிலாளர் சாசனத்"தின் பாப்பானவர்எனும் சிறப்புப்பெயரால் அறியப்படுகிறவரான 13-ம் சிங்கராயபாப்பானவர் பரமபதம்அடைந்த 50-ம் ஆண்டு நிறைவுதினமானது சென்ற ஆடிமாதம் 19-ந் திகதி இத்தாலியின் சகலபகுதிகளிலுமுள்ள இத்தாலிய கிறீஸ்தவ தொழிற்சங்கத்தாலே ஒழுங்குபண்ணப்பெற்ற விசேஷவைபவங்களால் ஞாபகப்படுத்தப்படலாயிற்று.

— பெல்ஜிய பாராளுமன்றத்தில் ஒரேயொரு கத்தோலிக்க குருவாய் வண. ஜீன் புறோயெக்ஸ் சுவாமியார் கடந்த 32 வருடகாலமாக அங்கத்தவராய் இருந்துவரலாயினர். தற்போது இவர் தமதுபதவியை இராசிநாமாச் செய்துவிடவே, இவரிடமாக லூவெயின் சர்வகலாசாலையிலே வேதசாஸ்திர பேராசிரியராய் இருந்துவருகிறவரான வண. ஜோர்ஜெஸ் பிலிப் சுவாமியார் தெரியப்பெற்றிருக்கின்றார்.

— துருக்கிய அரசாங்கம் தேவமாதாவின் மோட்சாரோபண ஞாபகார்த்தமாய் இம்மாதம் 15-ந் திகதி பாவனைக்குவிடவிருக்கும் இருஇனத்தபால்முத்திரைகளுள் ஒன்றிலே மாதாவின் மோட்சாரோபண பிரதிமை அமைந்திருக்கும். மற்றது தற்சமையம் அழிந்துபோய்க்கிடக்கும் எபேசஸ் நகரின் காட்சி அமைந்திருக்கும்.

— பிறேசில்நாட்டிலுள்ள நகர்கள் பட்டினங்களிலே பாத்திமாமாதாவின் திருச்சுரூபயாத்திரை நடைபெற்றது முதல் ஞானஸ்நானத்தின்போது மேரி என்று பெயர்இடப்படும் குழந்தைகளின்தொகை வழமையிலும் வெகுவாக அதிகரித்திருக்கிறதாம். அங்குறையோடி ஜனேய்றோ தலைநகரில்மாத்திரம் இரண்டுமாதங்களில் 600 பெண்குழந்தைகளுக்கு மேரிஎனும் நாமம் இடப்பட்டிருக்கிறது.

## பொதுவர்த்தமானம்

### ஒல்லாந்தும் கத்தோலிக்கரும்

தற்போது நெதர்லாந்தென அழைக்கப்படுகின்ற ஒல்லாந்திலே இற்றைக்கு நூறுவருடங்களின்முன் வசித்திருந்த சுமார் 30 லட்சம் குடிசனங்களில் கத்தோலிக்கர் 12 லட்சம்பேரே. இன்று அந்நாட்டிலுள்ள 1 கோடியே 2 லட்சம் குடிசனங்களில் 37 லட்சம்பேர் கத்தோலிக்கர். இவர்களின் சராசரி விகிதம் முன்போல இன்னும் அதேவிதமாய் இருந்தபோதிலும் அவர்கள் கடந்த ஓர்நூற்றாண்டிலும் அடைந்துள்ள விருத்தியும், சிறப்பும் பாராட்டத்தக்கனவாகும். அங்கு சமயசுதந்திரம் அளித்து, 1848-ம் ஆண்டு அரசியற் திருத்தஞ் செய்யப்படுமுன் ஒல்லாந்த கத்தோலிக்கர் தங்கள் சமயானுசார விஷயமாய் அனுபவித்த இடுக்கண்களோ அனந்தம். அவர்கள் அரசாங்கத்தில் எந்தவிதமான பதவியும் வகிக்கவியலாதிருந்தார்கள். இன்றோ அவர்கள்நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்க்கையிலே மிகுந்த செல்வாக்குற்றுவிளங்குகிறார்கள். அங்குள்ள கத்தோலிக்ககட்சி பாராளுமன்றமேல் சபை, கீழ்சபைஇரண்டிலும் மிகப்பலம் பொருந்திய குழுவாக இருந்துவருகிறது. கீழ்சபையின் முதல்வராகத் தற்போது இருந்துவருகிறவர் டக்றர் எல். ஜி. கோர்ட்செனேஸ்ம் எனப் பெயரிய கத்தோலிக்க பிரமுகரே. இன்று அந்நாட்டிலே அலங்காரமிக்க கத்தோலிக்க ஆலயங்களும், மற்றும் கத்தோலிக்க ஸ்தாபனங்களும் எங்கெங்குமே காணப்படுகின்றன. உலாந்த கத்தோலிக்க அச்சகங்கள் ஐரோப்பாவில் மிகச்சிறந்தனவும், அருந்தொண்டு ஆற்றுவனவுமாகும்.

### பற்களும் தேநீரும்

இளம்வயசிலே தேநீர்பருகத் தொடங்கும் பிள்ளைகள் நல்லபற்களுடன் வளருவார்களெனக் கண்டறியப்பட்டிருக்கிறது. அதற்குக்காரணம், ஒரு கோப்பை தேநீரில் "புளுலோறிட்" எனப்படும் இரசாயனப்பொருள் கலந்திருப்பதேயாகும். இதுவிஷயமாய் அமெரிக்காவிலும், பிரித்தானியிலும் நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகளின் பலனாய், ஓர்பிள்ளை புளுலோறிட் இரசாயனப்பொருளை அதிகமாகக் கொண்டிருக்குமிடத்து, அப்பிள்ளையின்பற்களுக்கு மிகக்குறைவான கெடுதியும், சிதைவும் ஏற்படுகின்றனவாம். அமெரிக்காவில் நடைபெற்றுவரும் ஆராய்ச்சிகளைப் படித்தறிந்த பிரித்தானியகோஷ்டிஒன்று முன்சொன்னவாறு அறிக்கையிட்டிருக்கிறது. இந்த இரசாயனப்பொருள் சில இயற்கை நீரிலும் போதியளவாக இருக்கின்றது. இது சாதாரண உப்பைப் போன்றதாகும்.

### அணுக்குண்டுப் பாதுகாப்பு

மேற்குஜேர்மனியின் பிரஸ்தாபம் பெற்ற கத்தோலிக்கபிரதமரான டக்றர் கொன்றாட் அடினோவர் அவர்கள் சமீபத்திலே அந்நாட்டின் கத்தோலிக்க தொழிலாளர்இயக்க தலைவர்கள் கூட்டத்தில் பேசியபோது: தற்சமையம் எங்கள்குடியரசுநாடு அமெரிக்க அணுக்குண்டுகளின் பாதுகாப்பிலே மிகவும்சேமமாய் உயிர்வாழ்ந்துவருகிறது; அமெரிக்க அணுக்குண்டுகள் இல்லாவிடின் ஐரோப்பா என்னவாகத் தோற்ற மளிக்குமென்று சொல்ல நான் அறியேன்; சோவியற் அரசினர் தங்கள் கொள்கைகளை மாற்றுவதற்கு நேர்மையாகத்தான் தயாராயிருக்கிறார்கள் என்பதைத் தங்கள்செயல்களைக்கொண்டு காண்பித்தாலன்றி மற்றப்படி அவர்களுடன் சமரசப்பேச்சுவார்த்தைகள் நடத்துவது வியர்த்தமாகுமென நான் எண்ணுகிறேன்; பிரான்சிய, அமெரிக்க, பிரித்தானிய தலைவர்களின்மகாநாடு மேற்குஐரோப்பாவின் ஐக்கியத்தைப் பலமுள்ளதாக்குமென நம்புகிறேன்எனக் கூறலாயினர்.

## சுக்கிரனு, செட்டிகுடி கெடுத்தானு ?

மூன்று வருடகாலமாகக் கோறியாவில் நடந்துவந்தபோர் சென்றஆடிமாதம் 27-ந் திகதியன்று நின்றது. இதன் விளைவாக உலகின் ஏனையபாகங்களிலும் சமாதானம் ஏற்படுமோ ? ஏற்படாதா ? என்று இப்பொழுதொன்றுஞ் சொல்வதற்கில்லை. "கோறியாப் போர் நிறுத்தத்தால் உறுதியான சமாதானம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதவேண்டாம்" என்று அமெரிக்க இராசாங்க மந்திரியார் திரு. டல்லெஸ் எச்சரிக்கிறார். ருஷியபிரதமர் மலெங்கவ் கோறிய போர்நிறுத்தம்பற்றி வடகோறிய பிரதமருக்கு அனுப்பியுள்ள செய்தியிலே: "இது வடகோறியாப்படைகளினதும், சீனப்படைகளினதும் மாபெரும் வெற்றி" என்று மாலைசூட்டியுள்ளார். இதுவரை கோறியாவில் ஈடுபட்டிருந்த சீனப்படைகளும், சீன—ருஷிய தளவாடங்களும் இனிமேல் இந்துசீனுவுக்குத் திரப்பப்படுமோவென்று சமுசயிப்பதற்கும் இடமில்லாமலில்லை. டல்லெஸ் அவர்களின் பேச்சையும மலெங்கவின்பேச்சையும கவனிக்குமிடத்து, கோறியாச் சமாதானத்தைப்பற்றி நாம் பூரணசந்தோஷம் கொள்ளமுடியவில்லை. கோறியாச் சமாதானம் விடிவெள்ளியா, செட்டிகுடிகெடுத்தானுஎன்று தெரியவில்லை. "வெள்ளி (Venus) காலித்தது, பொழுது விடியப்போகிறது" என்று மக்கள் சொல்லுவார்கள். ஆனால் வெள்ளியைப்போலவே தோற்றமுள்ள மற்றொரு கிரகமும் உண்டு. இதுதான் புதன் (Mars). இதற்குச் 'செட்டிகுடிகெடுத்தான்' என்றும ஒருபெயர் வழங்குகிறது. இது நள்ளிரவில் தோன்றும்கிரகம். வெளியூருக்குச் செல்லவேண்டியிருந்த ஒரு செட்டி இரவில்எழுந்து பார்த்தபோது புதனைக் கண்டு வெள்ளியென்றுமயங்கிப் பொழுதுவிடியப் போகிறதுஎன்று கருதிப் பயணத்தைத் தொடங்கிவிட்டானும். திருடர்கள் வழிமறித்து அவனைக் கொன்றார்களாம். அதுபோலவே கோறியாவில் கம்யூனிஸ்தர்கள் சமாதானத்தை ஏற்றுக்கொண்டது, தாங்கள் ஏற்கெனவே கலகம்மூட்டியுள்ள இதரபகுதிகளில் அதிககவனம்செலுத்துவதற்குத்தானே என்னவோ தெரியவில்லை. எனினும் யுத்தம்நடந்துகொண்டிருந்த பலவிடங்களில் ஒருஇடத்திலாவது யுத்தம் நின்றதுபற்றி நாம் தேவனுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

"உடன்படிக்கை கையெழுத்தானது குறித்துக் கடவுளுக்கு நன்றி செலுத்துவோம்" என்று தொடங்கினார் அமெரிக்க ஜனதிபதி. கோறியாப் போர்நிறுத்த உடன்படிக்கை கையெழுத்தானதும் நிகழ்த்திய வானொலிப் பிரசங்கத்தைத் தொடக்குகையில் அப்பிரசங்கத்தில் மேலும்அவர் கூறியதாவது: "தங்களிடையேயுள்ள தகராறுகளைப் போரின்மூலம் தீர்க்க முயலுவது வீண்என்பதைத் தேசங்கள் இனியாவது உணர வேண்டும் எனப் பிரார்த்திப்போமாக. காலஞ்சென்ற ஜனதிபதி லிங்கன் கூறியது போல, யாரிடமும் குரோதம் இல்லாமலும், எல்லோரிடமும் தயைகாட்டியும் நேர்மைவழியை உறுதியுடன் கடைப்பிடித்து வருவோமாக."

தேவனின் உதவியின்றி மனிதனால் ஒன்றும்செய்யமுடியாது. எனவே, போர்நிறுத்த உடன்பாட்டில் கையெழுத்து வைத்தபிறகு ஐக்கியநாடுகளின் சேனைத்தளபதியான ஜெனறல் கிளார்க் அவர்கள் பட்டாளங்களுக்கு விடுத்த செய்தியில் கூறியதையே நாமும்இங்கு கூறுகிறோம்:

"இப்போதைய இடைக்கால போர்நிறுத்தம் நிரந்தரமான போர்நிறுத்தத்துக்கு வழிசெய்யுமாறு பிரார்த்திப்போமாக."

(ச. வி.)

## தேம்பாவணியும் செபமாலையும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடித்த விஷமானது, அவன் உடலெங்கும் பாவுதல்போல, ஆதாம உண்ட நச்சுமரத்தின்கனியினுல் உண்டான சென்மபாவமானது, அவன் சந்ததியாரான எல்லாமனிதரிடத்தும் பாவலாயிற்று. சர்வேசுரனேடு பகைத்து அவாாற்சபிக்கப்பட்ட பிசாசுகளும் மனிதர்மேற்கொண்ட பொறுமையினுல், பாம்புருவத்தோடு பாவநஞ்சை எங்கும் பாவச்செய்தன. அதனுல், இயற்கைப் பொருள்களில் எல்லாம் பாவநஞ்சு கலக்கலாயிற்று. இவ்வாருகஉலகமெங்கும்பரவிய அந்த நஞ்சும், பாவமிகுதியும் குறையாததினுலே, உலகத்தவர் மதிமயங்கி அஞ்ஞானம் மிகுந்தவராய், வேதமுறைகளையும், நீதிநெறிகளையும் கைவிட்டனர். மெய்க்கடவுளை மறந்து அவாாற் படைக்கப்பட்ட சிருட்டிகளையெல்லாம் கடவுளாக வணங்கத்தொடங்கினர். இவ்வாருகப் பாவவெள்ளத்தில் அமிழ்ந்திருந்த மனுக்குலத்தை இரட்சிக்கச் சருவேசுரன் ஆதியில் வாக்குப்பண்ணியபடியே ஓர் இரட்சகரை அனுப்பச்சித்தமானுர். அந்த இரட்சகரின் வருகைக்காகச் சூசையப்பரும் மரியாளும் ஓயாது அழுது புலம்பி மன்ருடிக்கொண்டிருந்தனர். அம்மன்ருட்டுக்கு இரங்கியகடவுள், தாம் உலகத்தைஇரட்சிக்க மனிதனுய் அவதரிப்பதற்கு இவ்விருவரையும் உதவியாகத் தெரிந்துகொண்டதனுல், அவர்களை மணமுடித்துச் சேர்த்து வைத்தார்.

எனவே, இத்திருமணமானது மனுக்குலஇரட்சணியத்திற்கு உதவியளிப்பதாய் இருந்தது. உலகின்பாவத்தையும், பகையையும், கோபத்தையும், கொடுமையையும், பேயையும், பிணியையும்அகற்றி, வானுலகையும் பூவுலகையும் வாழவைத்தது இத்திருமணம்.

## அரசினர் ஆசிரிய கலாசாலை

நிகழும் ஆவணிமாதம் 13-ந் திகதி தொடங்கிப் 15-ந் திகதி முடிகிறவரையிலே உபகரணக்காட்சியும், "செய்கை மூலம் கல்வி" என்ருேர் மகாநாடும் பலாலி, அரசினர்கலாசாலையில் நடைபெறும். கல்விப்பகுதி நிரந்தர காரியதரிசி திரு. ஆர். எச் விக்கிரமசிங்கி அவர்கள் 13-ந்திகதி காலை 9 மணிக்குப் பொருட்காட்சியையும், மகாநாட்டையும் திறந்து வைப்பாரென அறிகின்ருேம்.

## றெயில்வே சலார்ஏற்றம்

இம்மாதம் 1-ந் திகதிமுதல் தெலிபோன், றெயில்வே, மின்சாரசலார்கள் ஏற்றப்பட்டுள்ளன. இந்தஏற்றமானது அரசாங்கத்துக்கு மேலதிகமாக இரண்டுகோடிரூபா வருமானத்தைக் கொண்டுவருமென எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றுள் றெயில்வேச்சலார் ஏற்றத்தால் ஒருகோடிரூபாவும், மின்சார சலார்ஏற்றத்தால் 30லட்சம்ரூபாவும் வருமானங்கிடைக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## புகையிலைவாங்கத் தீர்மானம்

யாழ்ப்பாண-மலையாளப் புகையிலைக் கூட்டுறவு-விற்பனவுச் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம்ஒன்று சங்ககட்டடத்திலே அதன்தலைவர் திரு. ரி. சி. இராசரத்தினம் அவர்கள்தலைமையில் நடந்தேறியது. அவ்வேளை தலைவர் புதுடில்லியில் நடைபெற்ற புகையிலைப் பேச்சு வார்த்தைகளின் வெற்றிகரமான முடிபை வெளியிட்டார். தற்போது சங்கத்தினிடம் பதப்படுத்தப்பட்டதாய்ச் சுமார் 1,570 கண்டி புகையிலை ஏற்றுமதிக்குத் தயாராய் இருக்கிறது. இது போதாதாகையால் இவ்வருடம் உற்பத்தி செய்யப்படும் புகையிலையையும் சென்றவருடம் வாங்கப்பெற்ற அதேவிலைக்கு வாங்குவதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படலாயிற்று.

## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! நெடுநாள் மழைபெய்யாது ஏற்பட்டிருக்கும் நீடியவரட்சி காரணமாகத் தண்ணீர்ப்பஞ்சம் சொல்லொணுக்கஷ்டங்களை மக்களுக்கு உண்டுபண்ணிவருகிறது. அவர்களிலும் மன்ஞர்ப்பட்டினமக்கள் அனுபவித்து வரும் கஷ்டமோ சொல்லுந்தரமன்று. நீர்க்குழாய்களைச் சூழவாக் குவிந்துகிடக்கும் பாத்திரங்களின் காட்சியும், அவற்றிலே நீர்எடுத்துச்செல்லக் கால் கடுக்கக் காத்துநிற்கும் பெண்மணிகளின் பரிதாபகாட்சியும் கவலையைத் தருவனவாகும். அம்மட்டா! மேயப் புல்லும், பருகநீருமில்லாது வருந்திமடியும் ஆடு, மாடு, குதிரை, கழுதை முதலிய மிருகங்களின் எண்ணிக்கையை நினைக்குந்தோறும் நெஞ்சம் புண்ணுகின்றது. கட்டுக்கரைக்குளத்தின் நீர்மட்டம் குறைந்துவருவதாலே சிறுபோகவேளாண்மையும் சிறப்பாகப் பலன் தருமோஎன்பது சந்தேகத்துக்கிடமாகின்றது. கமநிலங்கள் விஸ்தீரணத்திலே அளவின்றிப் பெருத்துவா, கட்டுக்கரைக்குளமோ விரைந்து மண்நிரவிச் சிறுத்துவந்தால் வேளாண்மை சிறந்து நல்லபலன் அளிப்பது எப்படியென்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

**ஆலயமும் புதியமடமும்**— மன்னுர்ப்பட்டினத்தைக் கண்ணுக்கழகாய்க் கவினுறச்செய்யும் சிறந்தகட்டடமாய் இன்றுவிளங்குவது, அலங்காரமாகக் கட்டியெழுப்பப்பெற்று முடிவடைந்து கொண்டுவரும் அர்ச். செபஸ்தியார் ஆலயமேயாம். இதனைப் போலும் சிறந்தஆலயம் இப்பகுதியில் வேறெங்காவது இல்லையென்றேகூறலாம். இச்சீரியதிருப்பணியில் பெருமுயற்சிஎடுத்தவர் அதிவண. எஸ். பீற்றர்சுவாமிகள் தாமும். இதற்கு அண்மையிலே திருக்குடும்ப கன்னிகாமடமும் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறதாம். மேல் மாடியுடன் நவமாகக் கட்டப்பெற்ற ஒருகட்டடத்தை நம்மேற்றிராணியாண்டவர் ஆசீர்வதித்துப்பாவனைக்குத் திறந்துவைத்த போது பலகுருமாரும், பெரியோர்களும் சமுகமாயிருந்தனராம்.

**மாந்தைப்பகுதி**– மருதமடுச் செபமாலைத்தாயாரின் பழைய தலமாகிய மகிமைவாய்ந்த மாந்தைப் பகுதியை மாதாபக்தர்கள் மறக்கவே மாட்டார்கள். அப்பதியிலே திருக்கெபிகொண்டு பரலோகம்நோக்கிய நேத்திரங்களுடனும், பக்திப்பரவசத்துடனும் காட்சியளித்துக் கண்டோர் உள்ளங்களைஎல்லாம் கவர்ந்துவரும் பரிசுத்தலூர்து மாதாவின் திருச்சுரூபத்தின் சுபசோபிதத்தை மறவாது அப்பதியை இன்னும் பிரபலிக்கம் அடையச்செய்வது அவர்களின் கடனுகுமாம்.

**விளையாட்டுப்போட்டி**— சுகாதாரவார விழாவைமுன்னிட்டுச் சென்ற 17-ந் திகதி மன்னுர்ப் பட்டினத்திலே பெரிய விளையாட்டுப் போட்டிஒன்று பல்வேறு பாடசாலைகளுக்குச் சேர்ந்த மாணவர்களிடையே நடத்தப்பட்டது. இதனைநடத்தப் பெருமுயற்சிஎடுத்தவர் வட்டாரவித்தியாதரிசி திரு. ச. நவரத்தினம் அவர்களேயாம். அதற்குப் பிரதிநிதி க. சிற்றம்பலம், கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரர் அதிவண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம்சுவாமிகள் உட்படப் பல குருமாரும், பெரியோரும் சமுகமளித்தமை குறிப்பிடற்பாலதாகும். வெற்றிபெற்றமாணவர்க்கு வெகுமதிகளும், தகுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டன. இவ்வித விளையாட்டுப்போட்டிகள் வருடந்தோறும் முறையாக நடைபெற்றுவர ஒழுங்குசெய்வது மிகவும் விரும்பப்படத்தக்கது.


# சிலோன்


இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

இலங்கையரின் முதலாவது
இன்ஷூரன்ஸ் கம்பெனி
முதன்மையாகவே இன்னும் விளங்குகிறது.

* * *

ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி
செய்யக்கூடிய பொலிஸி!

ஒவ்வொருவரின் தேவைக்கும் தகுந்ததான
பொலிஸி!



தலைமை ஆபீஸ்: 69, ராணி வீதி, கொழும்பு
டெலிபோன்: 6241, 6242, 6243.

கிளைகள்:

| | | | |
|---|---|---|---|
| காலி | அம்பலாந்தோட்டை | | மட்டக்களப்பு |
| கண்டி | யாழ்ப்பாணம் | | சிலாபம் |
| களுத்துறை | நீர்கொழும்பு | | நூரேலியா |
| மாத்தறை | பதுளை | ரத்னபுரி | குருனுகலை |

மொத்த மூலதனம் 75 லட்சம் ரூபா

## தி சிலோன் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்.

கீழ்க்கண்ட இன்ஷூரன்கள் இயற்றப்படும்:
ஆயுள், தீ, மோட்டார், பொதுநஷ்டஈடு,
கப்பல்சேதம் முதலியன
சேவையின்மூலம் பாதுகாப்பளிப்பது.


## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

யேசுவின் திருஇரக்கத்தாலும், சதாசகாயமாதாவின் அனுக்கிரகத்தாலும், அர்ச். பிலோமினு, அர்ச். ஆரோக்கியநாதர் இவர்களின் மன்ருட்டாலும் நாங்கள்கேட்ட மன்ருட்டுக் கிடைக்கப்பெற்ருேம். இன்னும் சகாயமாதாவின் இரக்கம் எங்கள்குடும்பத்தில் எப்பொழுதும் இருப்பதாக!

உரும்பராய் ம. அன்லெனெற்

* * *

திருக்குடும்பத்தினிடமும், அர்ச். அந்தோனியாரிடமும் நான் இரந்துகேட்டு வந்தகாரியம் அனுகூலமானதால் நேர்த்திப்படி இதனைப் பாதுகாவலனிற் பிரசுரஞ்செய்கிறேன்.

அச்சுவேலி இராக்கினி மாகிறேற்

* * *

அர்ச். சதாசகாயமாதா, அர்ச். ஆரோக்கியநாதர் இவர்களின்கிருபையினுல் என் மனைவிக்கு வெகுகாலமாக இருந்துவந்த வயிற்று உபாதை நீங்கியது. இவர்களின் நாமம் ஸ்துதிக்கப்படுவதாக. இதைப் பிரசுரிக்கக் காலதாமதமானதை மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன்.

கல்லாறு J. S.

* * *

திருஇருதயத்தின் விசேஷ இரக்கத்தாலும், தேவதாயாரினதும், அர்ச். சூசையப்பரினதும் இடைவிடாத மன்ருட்டினுலும் எனக்கிருந்த பயங்கரமான வியாதியிலிருந்து பூரண சுகமடைந்தேன். இவர்களின்நாமம் புகழப்படுவதாக.

அளவெட்டி M. P.

## N. P. T. A.—J. S. C. Examination, November, 1953

Late entries for private candidates close on 15-8-53. Additional fee of Rs. 2·00 is charged for late entries.

## GOVT. TENDERS

N2255—Toll Rent, Karaitivu-Kayts Ferry Service 1953/54—Tenders will be received by the G. A., N. P., up to 12 noon on 14-8-53 for the above service to commence on 1-10-53.

N2256—Toll Rent, Keratívu-Sangupiddy Ferry Service 1953/54—Tenders will be received by the G. A., N. P., up to 12 noon on 14-8-53 for the above service to commence on 1-10-53.

For particulars see Part 1—Section II, Govt. Gazette, 31-7-53, copies of which are available for perusal at all Post Offices.

## JAFFNA COLLEGE

Classes preparing for the London B. A. and B. Sc. General Examination in 1955 will be formed at Jaffna College on September 7th, 1953. Instruction is given in the following subjects:—

Physics, Chemistry, Pure and Applied Mathematics, Geography, English, History, Tamil, Sanskrit, Economics and Ethics.

All enquiries and applications for admission should be addressed to the President, Jaffna College, Vaddukoddai.

S. K. Bunker,
*President.*

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 6-1953